ஆசிரியரிடமிருந்து...........

# பிரிவினையின் விளைவு

எவர்கள் தங்கள் மார்க்கத்தை(த் தங்கள் இஷ்டப்படி பலவாராகப்) பிரித்து பல பிரிவினராகப் பிரிந்து விட்டனரோ அவர்கயுடன் உமக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. அவர்களுடைய விஷயமெல்லாம் அள்ளாஹ்விடமே இருக்கிறது. அவர்கள் செய்து கொண்டிருந்த (இத்தீய)வற்றைப் பற்றி பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான். (அல் குர்ஆன்-6:159)

இஸ்லாததை விளங்கிக் கொள்வது மிகவும் இலகுவானது. ஏனெனில் கருணையாளனான ﷲ அப்படித்தான் தனது தீனை ஏற்படுத்தியுள்ளான். எனவே இஸ்லாத்தை வெளிப்படையாக மறுப்பதுடன் அதிலிருந்து மக்களைத் தூரமாக்க முயற்சிப்போரது வலையிலிருந்து ﷲவின் அருளின் காரணமாக மக்கள் இலகுவாகத் தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் இஸ்லாம் எனும் பெயரில் மக்களை வழி கெடுக்கும் தலைவர்களைப் புரிந்து கொள்வதுதான் பாமர மக்களுக்கு மிகவும் சிரமமானதாகக் காணப்படுகின்றது. இத்தலைவர்கள் தமக்கெனத் தனித்தனிப் பிரிவுகளை உண்டுபண்ணி, அது இஸ்லாம் எனக்கூறி மக்களை அப் பிரிவுகளின்பால் அழைக்கின்றனர். ஆனால் அப்பிரிவுகளது ஒவ்வொரு அழைப்பும் நரகிற்கான அழைப்பு என்பதில் அணுவளவும் சந்தேகம் கிடையாது. ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூட தங்களது உம்மத்தில் பிரிவுகள் தோன்றும்போது வாழக்கூடிய முஸ்லிம்களை இத்தகைய பிரிவுகள் அனைத்தையும் விட்டும் முற்றிலும் ஒதுங்கி இருக்கும்படி எச்சரிக்கை செய்துள்ளார்கள். எவ்வளவுதான் சிரமங்கள் ஏற்பட்டாலும்கூட இஸ்லாத்தின் பெயரிலே இருக்கக்கூடிய பிரிவுகளுடன் ஒருபோதும் சேரக்கூடாதென தடைசெய்துள்ளார்கள். இத்தகைய பிரிவுகளில் ஏதேனும் ஒரு பிரிவுடன் சேர்ந்து விட்டால் அந்த ஒரே தவறு எம்மை

நரகில் ஆழ்த்திவிடும் என்பதே இவ்வாறு ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் தடை செய்வதற்கான காரணம் என்பதை அவர்களது ஹதீஸ் கூறிக் கொண்டிருக்கிறது.

இஸ்லாம் எனும் பெயரில் மக்களை வழிகெடுக்கக்கூடிய பிரிவுகளில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தங்களைத் தௌஹீத் வாதிகள் எனக் கூறிக் கொள்ளக்கூடிய பிரிவினரில் அனேகமானோர் அறிஞராகக் கருதக்கூடிய இந்தியாவைச் சேர்ந்த P.ஜெய்னுல் ஆப்தீன் என்பவர் (இவர; P.J.எனும் சுருக்கப் பெயரிலேயே அறிமுகமானவர் என்பதால் அவ்வாறே நாமும் குறிப்பிடுகிறோம்.) இஸ்லாத்திலிருந்து பிரிக்கமுடியாத தலைமைத்துவம் சம்பந்தமாக 1999-மார்ச்

மாதத்திற்கான “அல்முபீன்” இதழில் “அமீருக்குக் கட்டுப்படுதல் ஓர்

ஆய்வு” எனும் தலைப்பில் ஓராய்வை வெளியிட்டுள்ளார். I.A.C இன்

வெளியீடான “அல்முபீன்” எனும் மாத இதழ் M.ஷம்சுல்ளுஹா ரஹ்மானி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தாலும், மேலே குறிப்பிட்ட ஆய்வு அல்முபீன் இதழின் ஆசிரியர் குழவில் முதல் இடம்பிடித்துள்ள P.J யின் கருத்தேயாகும். எனவே P.J யின் இந்த ஆய்வு இஸ்லாத்துடன் எவ்வாறு முரண்படுகின்றது? என்பதை விபரமாகத் தெளிவுபடுத்துமாறு பலர் எம்மிடம் வேண்டிக் கொணடனர். அது அவசியமானதே என நாமும் கருதியதனால; P.J இந்த ஆய்வில் கையாண்டுள்ள தந்திரங்கள், இருட்டடிப்புக்கள் போன்றவற்றோடு, அவரது அறியாமை, வழிகேடு என்பவற்றைச் சுட்டிக்காட்டி, அவர் முன்வைத்துள்ள கேள்விகளுக்கும் தெளிவான பதில்களைத் தந்திருக்கின்றோம்

P.J யின் ஆய்விற்கான தெளிவான இந்த மறுப்புரையைப் படித்ததன் பிறகும் எவருக்கேனும் சந்தேகங்கள் இருந்து, உங்கள் சந்தேகங்களைத் தெளிவாக எமக்கு எழுதி மேலதிக விளக்கங்கள்

பெற நீங்கள் விரும்பினால் இன்ஷா ஞ அதற்கான விளக்கங்களைத் தருவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

ஜமாஅதுல் முஸ்லிமீனால் குர்ஆனையும் ஹதீஸையும்மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு முன்வைக்கப்படும் தூய இஸ்லாத்திற்கு முரணாக எவரேனும் கருத்து வெளியிட்டிருப்பதை நீங்கள் அறிந்து, அதுபற்றிய உண்மையை அறிந்து கொள்ளும் எண்ணத்தில் எமக்கு அக்கருத்தினை அனுப்பிவைத்தால் அது பற்றிய உண்மைகளையும் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தி, மக்கள் நேர்வழி என நினைத்து வழிகேட்டில் சென்றுவிடாதிருக்க எம்மால் முடியுமான முயற்சிகளை இன்ஷா ﷲ தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

மீண்டும் சந்திக்கும் வரை

-அன்புடன்-

ஆசிரியர்

# இஸ்லாமும் தலைமைத்துவமும்!

இஸ்லாம் என்பது ஞுவால் வழங்கப்பட்டுள்ள (தீனுல் பித்ரா) இயற்கை மார்க்கமாகும். இஸ்லாத்தின் எந்தவொரு அம்சமும் இயற்கையுடன் முரண்படக்கூடியதல்ல. இதனைப் புரிந்து கொள்ளாத சிலர் தமது சுய கருத்துக்களை இஸ்லாம் எனும் பெயரில் மக்கள் முன் முன்வைக்கின்றபோது இஸ்லாத்தின் தூய்மைக்குக் களங்கம் ஏற்படுவதுடன் இஸ்லாமும் ஏனைய மதங்களைப் போன்று மனிதர்களால் புனையப்பட்ட கற்பனைகள் எனும் எண்ணம் சிந்திக்கக் கூடியோரின் உள்ளங்களில் தோன்றுகின்னது. இத்தகைய நிலைமை

தோன்றும் போதெல்லாம் இந் நிலையை மாற்றி ஞவடைய தீனைத் தூய்மையாக மக்களின்முன் முன்வைப்பது முஸ்லிம்களின் கடமையாகும். இக்கடமையைச் செய்யக்கூடிய முஸ்லிம்களுக்கு ரசூலுள்ளாஹி ﷺ அவர்களின் நன்மாராயம் காத்திருக்கின்றது.

இஸ்லாத்தின் உயிரோட்டத்தையே புரிந்து கொள்ளாமல் சிலர் தமது மனோயிச்சைப்படி அரைகுறை விளக்கத்துடன் இஸ்லாத்தின் மூலாதாரங்களாகிய குர்ஆன், ஹதீஸைத் தொட்டுக்கூடப் பார்க்காமல் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தன் காரணமாக உலகிலேயே உன்னதமானதொரு கொள்கையான இஸ்லாம் இன்று வெறும் சடங்குகளாக சிலவேளை அறபு மொழியிலே சூட்டப்படுகின்ற ஒரு பெயரோடு சுருங்கியதாகக் கருதப்படுகின்றது.

மனிதன் கூடி வாழக்கூடிய தண்மையைக் கொண்டவனாகவே காணப்படுகின்றான். மனிதர்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பொது முயற்சியும் கூட்டாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இஸ்லாம் ஒரு இயற்கை மார்க்கம் என்பதனால் இஸ்லாமும் இந்தத் தண்மையிலிருந்து வேறுபடாமல் ‘கூட்டமைப்பு இல்லாமல் இஸ்லாமே இல்லை’ என உமர் ؓ அவர்கள் கூறக்கூடிய அளவுக்கு அதனை ஏற்றுக் கொண்டோரை ஒரே தலைமைத்துவத்தைக் கொண்டு, ஒரே கூட்டமைப்பாக வாழுமாறு பணிக்கின்றது.

மனிதனின் மற்றுமொரு நிலை அவனது ஆரம்பம்முதல் இறுதிவரைக்கும் அவன் ஏதோ ஒரு வகையில் பிறருக்குக் கட்டுப்பட்டே வாழ்கின்றான். சிறு பிள்ளையாக இருக்கின்றபோது பெற்றோரின் கட்டுப்பாட்டில் வளர்கின்றான். சிறிது வளர்ந்து பாடசாலை செல்லும்போது பெற்றோரின் கட்டுப்பாட்டுடன் அதிபர், ஆசிரியர்களின் கட்டுப்பாடும் சேர்ந்து விடுகின்றது. அவன் எவரிடமாவது ஊழியம் செய்பவனாக மாறினால் அவன் ஊழியம் செய்யக்கூடியவருக்கும் அவரது நிர்வாகத்திற்கும் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. அதேபோல் மனிதன் எந்த சமூகத்தில் வாழ்கின்றானோ அந்த சமூகத்தின் கலாசாரங்களுக்கு ஏதோவொரு விதத்தில் அவன் கட்டுப்பட வேண்டியிருக்கின்றது. இவைகளுக்கும் மேலாக தனது நாட்டை ஆட்சி செய்யக்கூடியோருக்குக் கட்டுப்படவேண்டிய நிலையும் அவனுக்கு இருக்கின்றது. இப்படி மனிதன் ஏனையோரது கட்டுப்பாடுகளுக்கு

உற்பட்டவனாகவே வாழ்கின்றான். இதன்மூலம் அவனது வாழ்வு ஒழுங்கமைக்கப் பட்டதாகவும், பிரயோசனங்களைக் கொடுக்க்கூடியதாகவும் இருக்கின்றது.

இதேபோன்றுதான் இயற்கை மார்க்கமாகிய இஸ்லாமும் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் எனும் அறபு வார்த்தையின் பொருள் அடிபணிதல், சரணடைதல் என்பனபோன்றதாகும். அந்தச் சொல்லிலிருந்து பிறந்ததுதான் முஸ்லிம் எனும் பெயர். அடிபணிந்து, கட்டுப்பட்டு நடக்கக் கூடியவனையே முஸ்லிம் எனக் கூறப்படும். யாருக்கு அடிபணிவதன் மூலம் ஒருவன் முஸ்லிமாக (கட்டுப்பட்டவனாக) மாறுகிறான் என்பதை அல்-குர்ஆன் கூறும்போது:

ஆம்! யார் ﷲ கண்காணிக்கின்றான் எனும் உணர்வுள்ளவராக தனதுமுகத்தை ﷲவுக்காக ஒப்படைக்கின்றாரோ அவருக்கு அவரது கூலி அவரது றப்பிடத்தில் உண்டு. (அல்-குர்ஆன் 2:112)

நபிமார்கள் வாழ்ந்தபோது அவர்கள் முன்வைத்த இஸ்லாம் எனும் கொள்கையை அந்தந்த நபிமார்களிடம் வந்து ஏற்பதன் மூலம் மக்கள் முஸ்லிம்களானார்கள். நபிமார்களுடைய காலத்தில் தலைமைத்துவப் பொறுப்பும் நபிமார்களிடமே காணப்பட்டதால் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாகக்கூடியவர்கள் தங்களுக்குரிய நபியிடம் வந்து ﷲவுக்கும் அந்த நபிக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அதாவது பைஅத் செய்து இஸ்லாத்தை ஏற்றார்கள்.

எங்களுக்கு முன்மாதிரியான ரசூலுள்ளாஹி ﷺ அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றவர்களும் இவ்வாறே இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றனர். உதாரணத்திற்காகப் பின்வரும் ஹதீஸைக் கூறலாம்:

அம்ரிப்னு ஆஸ் ؓ அவர்கள் கூறினார்கள்:

ﷲ என்னுடைய உள்ளத்தில் இஸ்லாத்தை ஏற்படுத்தியபோது ரசூலுள்ளாஹி ﷺ அவர்களிடம் வந்து உங்களுடைய வலக்கரத்தை உங்களுக்கு பைஅத் (உடன்படிக்கை) செய்வதற்காக நீட்டுங்கள் எனக் கூறினேன். உடனே தங்களது வலக்கரத்தை நீட்டினார்கள். அப்போது (நான்) எனது கையை மடக்கிக் கொண்டேன். அம்ரே!

உமக்கு என்ன நேர்ந்தது? எனக் கேட்டார்கள். (நான் ஒரு) நிபந்தனையிடப் போகிறேன் எனக் கூறினேன். என்ன நிபந்தனையிடப்போகிறீர்? எனக் கேட்டார்கள். நான் மண்ணிக்கப்பட வேண்டும் எனக் கூறினேன். (அதற்கு) அம்ரே! இஸ்லாத்தைத் தழுவுதல் அதற்கு முன்னால் உள்ள(பாவங்களை)வைகளை அழித்து விடுகின்றது, ஹிஜ்ரத் செய்தல் அதற்கு முன்னால் உள்ள(பாவங்களை)வைகளை அழித்து விடுகின்றது, ஹஜ் செய்தல் அதற்கு முன்னால் உள்ள(பாவங்களை)வைகளை அழித்து விடுகின்றது என்பது உமக்குத் தெரியாதா? எனக் கேட்டார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்-கி.ஈமான்)

ரசூலுள்ளாஹி ﷺ அவர்களிடம் பைஅத் செய்துஇஸ்லாத்தை ஏற்றதற்கு மற்றுமொரு ஆதாரம் பின்வருமாறு:-

இப்னு அப்பாஸ் ؓ அவர்கள் கூறினார்கள்:

ழிமாத் என்பவர்மக்காவிற்கு வந்தார். அவர் அஸத் ஷனூஆ கோத்திரத்தைச் சேர்ந்தவர். வியாதிகள் தீர மந்திரிக்கக் கூடியவராக இருந்தார். அப்போது மக்காவிலுள்ள சில மடயர்கள் நிச்சயமாக முஹம்மது(ﷺ)க்கு பைத்தியம் எனக்கூறுவதை செவிமடுத்தார். உடனே அந்த மனிதரை நான் சந்தித்தால் சிலவேளை الله என்னுடைய கைகளால் அவரைக் குணப்படுத்தலாம் எனக் கூறினார். பின்னர் அவர் அவர்களை சந்தித்து, முஹம்மதே﴾ﷺ﴿! நிச்சயமாக நான் இந்த நோய்களுக்கு மந்திரிக்கிறேன். நிச்சயமாக الله தான் நாடுகின்றவர்களை எனது கைகளால் குணப்படுத்துகின்றான். உமக்கு (குணமடையும்) நோக்கம் இருக்கின்றதா? எனக் கெட்டார். உடனே ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் 'நிச்சயமாகப் புகழனைத்தும் الله வுக்கே! அவனை நாம் புகழ்கிறோம். அவனிடம் உதவியும் தேடுகிறோம். الله யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ அவனை வழிகெடுக்கக்கூடியவர் எவருமில்லை. எவரை வழிகெடுத்து விடுகின்றானோ அவரை நேர்வழிப்படுத்துவோரும் எவருமில்லை. லேம் الله வைத் தவிர எந்த இலாஹுமில்லை. அவன் தனித்தவன், அவனுக்கு எந்த இணையும் கிடையாது எனவும், அத்துடன் நிச்சயமாக முஹம்மதுﷺ அவனது அடியாரும் அவனது தூதருமாவார்கள் எனவும் நான் சான்று

பகர்கின்றேன். நிற்க....!' எனக் கூறினார்கள். உடனே அவர்(ழிமாத்) உங்களது வார்த்தைகளை எனக்கு மீண்டும் கூறுவீர்களாக! எனக் கேட்டார். நபிகளார் ﷺ அவர்கள் அவற்றை அவருக்கு மூன்று முறை கூறினார்கள். அதற்கவர் 'நிச்சயமாக நான் குறிகாரர்களது வார்த்தைகளையும், சூனியக்காரர்களது வார்த்தையையும், கவிஞர்களின் வார்த்தையையும் கேட்டிருக்கின்றேன். உம்முடைய இந்த வார்த்தைகளைப் போன்று நான் அறவே கேட்டதில்லை. அவை கடலின் ஆழத்தை அடைந்து விட்டன' எனக் கூறிவிட்டு இஸ்லாத்தின்மீது நான் உங்களுக்கு பைஅத் செய்வதற்காக உங்களது கையைத் தாருங்கள் எனக் கூறினார். பின்னர் நபிகளார் ﷺ அவர்களிடம் பைஅத் செய்தார். பின்னர் தூதர் உமது கூட்டத்தாருக்காகவுமா? எனக் கேட்டார்கள். எனது கூட்டத்தாருக்காகவும் (பைஅத் செய்கிறேன்) எனக் கூறினார்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.ஜும்ஆ)

நபிமார்களின் வருகை நின்றதன் பிறகு தலைமைத்துவப் பொறுப்பு சாதாரண மனிதர்களிடம் ﷲவால் விடப்பட்டுள்ளது. எனவே நபிமார்கள் தலைமைத்துவத்திலிருந்தபோது எப்படி அவர்களிடத்தில் சென்று அவர்கள் முன்வைக்கக்கூடிய இஸ்லாம் எனும் கொள்கையை ஏற்றுக்கொண்டார்களோ அதேபோன்று நபிமார்களின் வருகை நின்றதன் பின்னால் இஸ்லாத்தின்பால் அழைக்கக்கூடிய முஸ்லிம்களின் கூட்டமைப்பில் (ஜமாஅதுல் முஸ்லிமீனில்) சென்று அவர்கள் (அல்-குர்ஆன், ஸஹீஹான ஹதீஸ் ஒளியில்)

முன்வைக்கக்கூடிய

இஸ்லாம் எனும் கொள்கையை ஏற்பதன் மூலமே ஒருவர் முஸ்லிம் ஆகின்றார். இதனை இஸ்லாமிய ஷரீஅத்தில் அமீருக்கான உடன்படிக்கை (பைஅத்) எனக் கூறப்படும். இந்த ரீதியில் பார்க்கும்போது உலகிலே மனிதர்களுக்கு மத்தியில் ஒரு கொள்கை எப்படி அறிமுகப்படுத்தப் படுகின்றதோ அதேபோல்தான் ﷲவால் வழங்கப்பட்ட கொள்கையாகிய இஸ்லாமும் இயற்கையுடன் இணைந்ததாக மக்களின்முன் முன்வைக்கப்படுகின்றது. அத்துடன், பல கட்டுப்பாடுகளுடன் வாழ்கின்ற மனிதனுக்கு முன்வைக்கப்படுகின்ற

கொள்கையாகிள இஸ்லாத்தையும் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகவே யாவற்றையும் அறிந்த ﷲ அமைத்துள்ளான்.

அமீரின்றி முஸ்லிமாக இருக்க முடியுமா?

இஸ்லாத்தின் பார்வையில் இஸ்லாம் எனும் கொள்கையை ஒருவன் ஏற்றுக் கொள்ளாத வரையில், அதாவது ஏற்றுக்கொள்வதனை ஜமாஅதுல் முஸ்லிமீனும் அவர்களுக்கான ஒரே இமாம்/அமீரும் காணப்படும்போது அந்த இமாமிற்கு உடன்படிக்கை செய்து கட்டுப்படுவதன் மூலம் வெளிப்படுத்தாதவரை அவன் முஸ்லிமாக முடியாது. நபிமார்களின் வருகை முடிந்துவிட்ட இன்றைய காலத்தில் முஸ்லிம் என்பவர் ﷲ வுக்கும் அவன் தூதருக்கும் முஸ்லிம்களின் கூட்டமைப்பாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனின் அமீருக்கும் கட்டுப்படுவது கட்டாயமாகின்றது.

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

“யார் தனக்கென ஜமாஅத்திற்கான ஓர் இமாம் இல்லாத நிலையில் மரணிக்கின்றாரோ நிச்சயமாக அவரது மரணம் ஜாஹிலிய்ய (இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட) மரணமேயாகும்” (முஸ்தத்ரக் ஹாகிம் - ஸஹீஹ்)

இந்த ஹதீஸின் மூலம் இஸ்லாமெனும் கொள்கையை அதனைச் சொல்லக்கூடிய முஸ்லிம்களின் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவதன் மூலமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது உறுதியாகின்றது. அந்த ஒரே தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படாத நிலையை ஜாஹிலிய்யத் என இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. அறியாமை எனும் பொருள் கொண்ட இந்தச் சொல் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட நிலையைக் குறிப்பதற்காக குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.. உதாரணத்திற்கு இந்த வசனத்தைப் பார்த்து சிந்தியுங்கள்:

“ஜாஹிலிய்யச் சட்டதிட்டங்களையா இவர்கள் விரும்புகின்றனர்? உறுதியாக நம்பிக்கை கொண்ட மக்களுக்கு தீர்ப்பளிப்பதில் ﷲவை விட அழகானவன் யார்?” (அல்-குர்ஆன் 5:50)

இந்த வசனத்தில் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட சட்டத்தைக் குறிப்பதற்கு ஜாஹிலிய்யச் சட்டம் என ﷲ கூறுகின்றான். எனவே முஸ்லிம்களின் கூட்டமைப்பின் (ஜமாஅதுல் முஸ்லிமீனின்) தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படாத நிலையில் அதாவது தனக்கென ஓர் இமாம் இல்லாத நிலையில் மரணிப்பது என்பது இஸ்லாத்தின் பார்வையில் இஸ்லாம் எனும் வட்டத்திற்கு அப்பால் (தன்னிடத்தில் இஸ்லாம் இல்லாத நிலையில்)இருந்து மரணிப்பதாகும்.

# தலைமைத்துவத்திற்குரிய தகுதிகள்

தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றக்கூடிய (முஸ்லிம் களின் கூட்டமைப்பு) ஜமாஅதுல் முஸ்லிமீனுக்கு தலைமை தாங்கக்கூடியவருக்கு சில தகுதிகள் காணப்பட வேண்டும் என இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல்-குர்ஆனும் ஸஹீஹான ஹதீஸ்களும் கூறுகின்றன. நபிமார்களின் காலத்தில் தலைமைத்துவத்திற்குரியவரை தகுதி கண்டறியும் பொறுப்பு மக்களுக்கு இருக்கவில்லை. ஏனெனில் அந்த நபிமார்களை நேர்வழி காட்டக்கூடிய தலைவர்களாக ﷲ தெரிவு செய்திருந்தான். இதுபற்றி ﷲ கூறும் போது:-

‘‘மேலும் அவர்களை (நபிமார்களை) எமது கட்டளைப்படி நேர்வழி காட்டக்கூடிய இமாம்களாக (தலைவர்களாக) ஆக்கினோம்’’ (அல்-குர்ஆன் 21:73)

நபிமார்களின் பிறகு தோன்றக்கூடிய முஸ்லிம்களின் தலைவருக்கு அல்-குர்ஆனிலும் ஸஹீஹான ஹதீஸ்களிலும் கூறப்பட்டிருக்கும் தகுதிகள் இருக்கின்றனவா? எனக் கண்டறிவது முஸ்லிம்களின் கடமையாகும்.

முஸ்லிம்களின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்பதற்குரிய தகுதிகளாக மூன்று விடயங்களை இஸ்லாம் கூறுகின்றது. அவை:-

1. முஸ்லிம்களை வழிநடாத்தும் திறமையுள்ள

முஸ்லிமாக இருத்தல்.

விசுவாசிகளே! நீங்கள் ﷲவுக்கு வழிப்பட்டு நடவுங்கள். (அவ்வாறே ﷲவுடைய) தூதருக்கும் உங்களில் நின்றுமுள்ள அதிபருக்கம் வழிப்பட்டு நடவுங்கள். (அல்-குர்ஆன் 4:59)

இவ்வசனத்தில் உங்களில் நின்றுமுள்ள தலைவருக்குக் கட்டுப்படுங்கள் என ﷲ கூறுவதிலிருந்து முஸ்லிம்களின் தலைவர் முஸ்லிமாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. அதேபோல் முஸ்லிம்களின் தலைவரிடத்தில் தெளிவான குப்ர் தோன்றும்போது அவரது அதிகாரத்தைப் பறித்துவிட வேண்டும் எனும் ஹதீஸும் முஸ்லிமாக இருக்கும்வரைதான் ஒருவருக்கு முஸ்லிம்களின் தலைவராகும் தகுதி இருக்கின்றது என்பதனை நிரூபிக்கின்றது. அது:-

உபாததிப்னு ஸாபித் ؓ அவர்கள் கூறினார்கள்:

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் எம்மை அழைத்தார்கள். அப்போது அவர்களுக்கு நாம் பைஅத் செய்தோம். விருப்பிலும் வெறுப்பிலும், சிரமத்திலும் இலகுவிலும், எம்மைவிடப் பிறருக்கு முன்னுரிமையளித்தபோதிலும் (அமீரது கட்டளைக்கு) செவிமடுத்துக் கட்டுப்பட வேண்டும் என்பதும் தலைமைத்துவத்தில் இருப்போரிடத்தில் விடமிருந்து வந்த தெளிவான ஆதாரத்துடனான குப்ர் காணப்பட்டாலேயன்றி அவர்களிடமிருந்து தலைமைத்துவத்தைப் பறிக்கக் கூடாது என்பதும் எம்மிடம் பைஅத் (சத்தியப் பிரமாணம்) எடுத்த விடயங்களில் உள்ளவைகளாகும்.
(ஸஹீஹ் முஸ்லிம்-கி.இமாரா)

2. ஆணாக இருத்தல்

அல்-குர்ஆனிலே ﷲ பின்வருமாறு கூறுகின்றான்:

பெண்களின் நிர்வாகிகளாக ஆன்களே இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் ஒருவரைவிட மற்றவரை ﷲ மேன்மையாக்கி வைத்திருக்கின்றான். அத்துடன் (ஆண்கள்) தங்களது பொருள்களிலிருந்து (பெண்களுக்காக) செலவும் செய்கின்றனர். (அல்-குர்ஆன் 4:34)

எனவே நிர்வாகத்திலே மிக உயர்ந்த நிர்வாகப் பொறுப்பாகிய முஸ்லிம்களின் தலைமைத்துவப் பொறுப்பு ஒரு ஆணிடமே இருக்க வேண்டும் என்பதை மேலே கண்ட அல்-குர்ஆனிய வசனம் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல் தமது அரசர் மரணித்துவிடவே அந்த இடத்திற்கு ஒரு பெண்ணை நியமித்தபோது ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் பின் வரும் விதியைக் கூறினார்கள்.:

தங்களது அதிகாரத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைக்கும் எந்தவெரு சமுதாயமும் நிச்சயமாக வெற்றி பெறாது. (ஸஹீஹுல் புஹாரி)

எனவே முஸ்லிம்களின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கக் கூடியவர் ஒரு ஆணாக இருக்க வேண்டுமென்பதும் ஒரு நிபந்தனையாகும்.

3. ﷲவடைய வேதத்தைக் கொண்டு வழி நடாத்துதல்.

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் ஹஜ்ஜதுல் விதாவின்போது முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டார்கள்:

உறுப்புக்கள் துண்டிக்கப்பட்ட அடிமைதான் உங்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டாலும் ﷲ வுடைய வேதத்தைக் கொண்டு வழி நடத்தும் வரைக்கும் அவரது செல்லைக் கேட்டு வழிப்பட்டு நடவுங்கள்!

(ஸஹீஹ் முஸ்லிம்)

ﷲவுக்கு மாறு செய்யும் விடயத்தில் கட்டுப்பாடு கிடையாது என்பதையும் ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள்:

முஸ்லிமான ஒருவர் மீது பாவமானதை ஏவப்பட்டாலேயன்றி செவிமடுத்துக் கட்டுப்படுவது கடமையாகும். பாவத்தைக் கொண்டு ஏவப்பட்டால் எவ்விதச் செவிமடுத்தலோ, எவ்விதக் கட்டுப்பாடோ கிடையாது.

(ஸஹீஹ் முஸ்லிம் - கிதாபுல் இமாரா)

ﷲவுடைய வேதத்தைக் கொண்டு வழி நடாத்தும் வரைக்குமே அமீருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் நிபந்தனையிட்டு இருப்பதனால் நிபந்தனை தவறும்போது நிபந்தனையிடப்பட்டதும் இல்லாமல் போய்விடும் என்பது விதியாகும். எனவே முஸ்லிம்களின் அமீர் ﷲவுடைய வேதத்தைக் கொண்டு வழி நடாத்துதல் என்பது அமீருக்குரிய தகுதிகளில் ஒன்றாகும்.

முஸ்லிம்களின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்பதற்குரிய தகுதிகளாக இம் மூன்றுந்தான் ﷲவுடைய வேதத்தில் இருக்கின்றன. இதற்கும் அப்பால் வேறு சில தகுதிகளும் அவசியமென நரகின்பால் அழைக்கக்கூடிய சில தலைவர்கள் ﷲவுடைய வேதத்திலிருந்து சரியான எவ்வித ஆதாரத்தையும் முன்வைக்காது வாதாடுகின்றனர். அந்தத் தகுதிகள் எவை என்பதையும் அவை இஸ்லாத்தில் ஏற்கக் கூடியனவா? என்பதையும் இதன் பின்னால் விபரிக்கின்றோம்.

முஸ்லிம்களின் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவதன் அவசியம்.

1. மூன்று முஸ்லிம்கள் தோன்றும்போது அவர்களுக்கென ஒரு தலைமைத் துவத்தை ஏற்படுத்துவது இஸ்லாமிய பார்வையில் கடமையானதாகும். அந்தத் தலைமைத்துவத்தையும் அந்தக் கூட்டத்தையும்தான் ஜமாஅதுல் முஸ்லிமீனும் அவர்களின் தலைழமத்துவமும் எனும் பெயரால் ரசூலுள்ளாஹி ﷺ அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தலைமைத்துவம் காணப்படுகின்றபோது இஸ்லாத்தை ஏற்க விரும்பும் ஒருவர் அந்தக் கூட்டமைப்பிடமே செல்ல வெண்டும் எனும் இஸ்லாமிய விதியைக் கொண்டே இஸ்லாமியத் தலைமைத் துவத்திற்கு கட்டுப்படுவதன் அவசியத்தை எவரும் புரிந்து கொள்ளலாம்.

2. முஸ்லிம்களின் தலைமைத்துவத்திற்கு வழிப்படுவதன் அவசியத்தைப் பற்றி ﷲ பின்வருமாறு கூறுகின்றான்:-

விசுவாசிகளே! நீங்கள் ﷲவை வழிப்பட்டு நடவுங்கள். (அவ்வாறே ﷲவுடைய) தூதருக்கும், உங்களில் நின்றுமுள்ள அதிபருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்.

(அல்-குர்ஆன் 4:59)

3. முஸ்லிம்களின் தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுவது சுவனம் செல்ல நினைப்பவருக்கு இன்றியமையாததாகும்.

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

ஐந்து விடயங்க ﷲ எனக்கு ஏவியுள்ளான். அதனையே உங்களுக்கும் நான் ஏவுகின்றேன். செவிமடுத்து நடவுங்கள், கட்டுப்பட்டு நடவுங்கள், கூட்டமைப்பாக இருங்கள், ஹிஜ்ரத்துச் செய்யுங்கள், ﷲவின் பாதையிலே முயற்சியும் செய்யுங்கள். மேலும் யார் ஜமாத்தி(கூட்டமைப்பி)லிருந்து சாண் அளவு வெளியேறுகின்றாரோ, (அவர்) திரும்பி வந்தாலேயன்றி நிச்சயமாக அவர் தனது கழுத்திலிருந்து இஸ்லாமிய வளையத்தைக் களைந்து விட்டார். எவர் (பிரிவினைவாத) ஜாஹிலிய்யக் குரல் கொடுக்கின்றாரோ அவர் நரகின் எரி கொள்ளியாவார். அவர் தொழுது, நோன்பு நோற்று, தான் ஒரு முஸ்லிம் என வாதிட்டாலும் சரியே! (அஹ்மத், திர்மிதி-ஸஹீஹ் மிஸ்காத்-3694)

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

யார் நரகிலிருய்து தூரமாக்கப்பட்டடு, சுவனத்தில் நுழைவிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றாரோ அவர் ﷲவைக் கொண்டும் மறுமை நாளைக் கொண்டும் விசுவாசம் கொண்ட நிலையில் அவருக்கு அவரது மரணம் வரட்டும். அத்துடன் மனிதர்கள் தன்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என அவர் விரும்புகின்றாரோ அவ்வாறே அவர்களுடன் அவரும் நடந்து கொள்ளட்டும்.மேலும்

யார் இமாமுக்கு பைஅத் செய்திருக்கின்றாரோ, தனது கையின் (உற்)புறத்தையும் தனது உள்ளத்தின் நம்பிக்கையையும் அவருக்குக் கொடுத்திருக்கின்றாரோ அவர் முடிந்தால் அவருக்குக் கட்டுப்படட்டும்.

மற்றொருவர் அவரோ(இமாமோ)டு போட்டிபோட வந்தால் அவரது கழுத்தை வெட்டி விடுங்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

# தலைமைத்துவத்திற்கு மாறு செய்தலும் அதனை விட்டு வெளியேறுதலும்.

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

யார் எனக்கு வழிப்படுகின்றாரோ நிச்சயமாக அவர் ﷲவுக்கு வழிப்பட்டு விட்டார். யார் எனக்கு மாறு செய்கின்றாரோ நிச்சயமாக அவர் ﷲவுக்கு மாறு செய்து விட்டார். யார் அமீருக்கு வழிப்படகின்றாரோ நிச்சயமாக அவர் எனக்கு வழிப்பட்டுவிட்டார். யார் அமீருக்கு மாறு செய்கின்றாரோ நிச்சயமாக அவர் எனக்கு மாறு செய்து விட்டார். (ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

யார் தனது அமீரிடத்தில் தான் வெறுக்கக்கூடிய ஏதேனுமொன்றைக் காண்கின்றாரோ அவர் பொறுமையாக இருக்கட்டும். ஏனெனில் எவரேனும் ஒருவர் ஜமாஅத்தை விட்டும் ஒரு சாண் அளவு பிரிந்து மரணிப்பாரென்றால், அவரது மரணம் ஜாஹிலிய்ய மரணமாகவே அன்றி அமையாது.

(ஸஹீஹுல் புஹாரி -கி.அஹ்காம்)

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக எனக்குப் பிறகு சிலருக்க முன்னுரிமை கொடுக்கப் படுவதுடன் நீங்கள் வெறுக்கக் கூடிய (பல) பல விடயங்களும் ஏற்படும். எம்மில் யார் அந்த நிலையை சந்திக்கின்றரா அவர்களுக்குத் தாங்கள் கட்டளையீடுது என்ன? என(த் தோழர்கள்) கேட்டனர். நீங்கள் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்துங்கள். உங்களுக்குக் கிடைக்க வேண்டியதை ஞவிடம் கேளுங்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

யார் கட்டுப்பாட்டிலிருந்து கையை உருவிக் கொள்கின்றாரோ மறுமை நாளில் (அவர் முஸ்லிம் என்பதற்கு) எவ்வித ஆதாரமுமின்றி ﷲவைச் சந்திப்பர்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

மேற் காணப்படும் ஹதீஸ்களில் இஸ்லாமும் தலைமைத்துவமும் ஒன்றாகவே கணிக்கப்படடிருப்தை எவரும் புரிந்து கொள்ளலாம். முஸ்லிம்களின் அமிரக்குக் கட்டுப்படுதைத் தவிர, இஸ்லாத்தின் ஏனைய அனைத்துக் கடமைகளையும் செய்வதானது இஸ்லாத்தையே ஏற்காத ஒருவர் இஸ்லாமிய போதனைகளின்படி நடப்பதற்கு சமமானது. எனவே மேலே தரப்பட்டுள்ள ஹதீஸ்களின் மூலம்: ஜமாஅதுல் முஸ்லிமீனின் அமீருக்கு மாறு செய்தல் ரசூலுள்ளாஹி ﷺ அவர்களுக்கு மாறு செய்வதாகும், அவரின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிச் செல்லல் இஸ்லாத்திலிருந்தே வெளியேறிச் செல்வதாகும் என்பன தெளிவாகப் புரிகின்றன.

எனவே இந்த ஹதீஸ்களின் தீர்ப்புப்படி முஸ்லிம்களின் அமீருக்குக் கட்டுப்பட்டு நடப்பது கடமையாகும். அந்த அமீருக்கு மாறு செய்வது ﷲவிடத்தில் தண்டனைக்குரிய குற்றமாகும். எவராவது ஒரு முஸ்லிம் அந்த அமீரின் கட்டுப்பாட்டிலிருந்து தனது கையை உருவிவிட்டு, அவர் மீண்டும் அமீருடைய கட்டுப்பாட்டிற்குள் வராத பட்சத்தில் இஸ்லாத்தை விட்டே வெளியேறிச் சென்றவராகின்றார்.

இத்தீர்ப்பகளைப் பார்ப்பதன் மூலம் முஸ்லிம்களின் அமீருக்குக்கட்டுப்பட்டு, அதில் மரணிக்கும் வரைக்கும் நிலைத்திருப்பது சுவனம் நுழைய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்பதும் தெளிவாகின்றது. அறிவு ரீதியாக சிந்திப்போரும் இந்த ஹதீஸ்களின் தீர்ப்பு முற்றிலும் சரியானது என்பதை ஏற்றுக்கொள்வார்கள். அதாவது, இஸ்லாம் எனும் கொள்கையை ஏற்றுக் கொண்டவன் என்பதே முஸ்லிம் எனும் வார்த்தைக்குப் பொருளாகக் காணப்படும்போது அக்கொள்கையிலிருந்து, அக்கொள்கையை ஏற்றுக் கொண்டோரிலிருந்து, அவர்களின் அமீரின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிச் செல்பவனை அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டவன் என எப்படிக் கூறலாம்?

# முஸ்லிம்களின் கூட்டமைப்பும் தலைமைத்துவமும் இல்லாவிட்டால்..........

இஸ்லாத்தையும்,இஸ்லாத்திற்கும் தலைமைத்துவத்திற்குமுள்ள தொடர்பையும் புரிந்துகொண்ட ஒருவர் முஸ்லிம்களின் கூட்டமைப்பையும் அவர்களுக்கென்று ஒரு அமீரும் இல்லாத காலத்தில் வாழ நேரிட்டால் அவர் எக் காலத்திலும் பாதுகாக்கப்படக் கூடியது என ﷲவால் வாக்களிக்கப்பட்ட ﷲவின் வேதத்தை முற்றாக நம்பி அவர் ஒரு முஸ்லிமாக வாழவேண்டும். தலைமைத்துவம் இல்லாமலும் கூட்டமைப்பு இல்லாமலும் தம்மையும் முஸ்லிம்கள் என வாதிக்கக்கூடிய பிரிவுகளுடன் ஒரு முஸ்லிம் ஒருபோதும் இணையக் கூடாது என ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் தடை செய்ததுடன், ஒரே தலைமைத்துவமும் கூட்டமைப்புமின்றி முஸ்லிம்கள் என வாதிக்கக்கூடியோரை நரகின்பால் அழைக்கக்கூடிய பிரிவுகள் எனவும் ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிரிவுகள் காணப்படக்கூடிய காலத்தில் நான் வாழ நேரிட்டால் எனக்குத் தாற்கள் கட்டளையிடக் கூடியதென்ன? என ஹு'தைபா ரலி ரசூலுள்ளாஹி ﷺ அவர்களை நோக்கிக் கேட்டபோது, ஜமாஅதுல் முஸ்லிமீனையும் அவர்களது இமாமையும் பற்றிப் பிடிப்பீராக! எனக் கூறினார்கள். அதற்கு ஹு'தைபா ரலி அவர்களுக்கென ஒரு ஜமாஅத்தும் ஒரு இமாமும் இல்லை என்றால்...? எனக் கேட்டபோது, அவ்வனைத்துப் பிரிவுகளையும் விட்டொதுற்குவீராக! உமக்கு மரணம் வரும்வரையில் ஒரு மரத்தின் வேரைத்தான் கடித்திருக்க வேண்டிய (தனித்த) நிலை ஏற்படினும் சரியே! என ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹு'ல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

எனவே ஜமாஅதுல் முஸ்லிமீனும் அவர்களுக்கென ஒரு இமாமம் இல்லாதபோது தனித்துவிடும் முஸ்லிம்கள் மூன்று பேர்கள் சேர்ந்துவிடும்போது அவர்களுக்கென ஒருஅமீரைத் தேர்ந்தெடுப்பது அவர்கள்மீது கடமையாகவும் அப்படி செய்யாமல்

இருத்தல் அவர்களுக்குத் தடைசெய்யப்பட்ட (ஹராமான) ஒன்றாகவும் ஆகிவிடுகின்றது

ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறினார்கள்:

பூமியில் பாலைவனத்தில் இருக்கக்கூடிய மூவருக்கு(க்கூட) அவர்களில் ஒருவரை அமீராக நியமிக்காதிருத்தல் ஆகுமானதல்ல.

# முஸ்லிம்களின் வழிகாட்டி யார்?

• நேர்வழியென நினைத்து பல்வேறு வழிகேடுகளில் தட்டழிந்து கொண்டிருந்தபோது ﷲவை அடிபணியக்கூடிய ஒரு முஸ்லிம் சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்காக ﷲவ அவனத தூதராக முஹம்மத் ﷺ அவர்களை அனுப்பினான். இப்ராஹீம் அலை பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்:

எங்கள் றப்பே! எங்களிருவரையும் உனக்கு (முற்றிலும்) கீழ்ப்படிகின்ற (முஸ்லிமான)வர்களாகவும் எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை உனக்குக் கீழ்ப்படிகின்றவர்களாகவும் ஆக்கி ழறீவைப்பாயாக!...

எங்கள் றப்பே! (என் சந்ததியினரான) அவர்களிலிருந்து அவர்களின் ஒரு தூதரை அனுப்புவாயாக! அவர்களுக்கு அவர் உன்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, வேதத்தையும் ஞானத்தையும் கற்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைப்பார். (அல்-குர்ஆன் 2:128,129)

இப்ராஹீம் நபியைப் பின்பற்றுவதாக வதாடிக்கொண்டிருந்த முஷ்ரிகீன்களுக்கும் தக்க ஆதாரங்களின்றி தாமே சுவனம் செல்லக்கூடியோர் எனத் தனித்தனியே வாதாடிக்கொண்டிருந்த யூத கிருஸ்தவர்களுக்கும் மத்தியில்தான் ﷲ உண்மையிலேயே இப்றாஹீம் அலை அவர்களைப் போன்று இணைவைப்பதிலிரந்து முற்றுமுழுதாக விடுபட்டு, ﷲவுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு வாழ்வதன் மூலம் சுவனம் செல்வதற்குத் தகுதியானதோர் கூட்டமைப்பை உருவாக்குவதற்காக முஹம்மத் ﷺ அவர்களை அனுப்பினான். தான் அனுப்பப்பட்ட நோக்கத்தைப் பூர்த்தி செய்யுமுகமாக அந்த ரசூலுள்ளாஹி ﷺ ஒரு இஸ்லாமிய சமுதாயத்திற்கு அதாவது ஜமாஅத்துல் முஸ்லிமீனுக்கு அடித்தளமிட்டு, அதனைக் கட்டியெழுப்பி, உலகில் அதன் இறுதிக் கடமையின் சில பகுதிகளை நிறைவேற்றி விட்டுத் தமது கடமையில் தொடர்ந்து கொண்டிருந்தபோது ﷲவின் அழைப்பு வரவே அவர்கள் ஞுவிடம் சென்று விட்டார்கள். இறுதிக் கடமையைப் புர்த்தி செய்வதற்கு செயல் ரீதியான முன்மாதிரி அவசியமில்லை என்பதே ﷲவின் முடிவு என்பதை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஆகவே சுவனம் செல்ல விரும்பும் ஒருவருக்கு மிகத் தெளிவான வழிகாட்டல் வெறும் தத்துவமாக அல்லாமல் நடைமுறை விளக்கத்துடன் முழுமையாகக் காணப்படுகின்றது. எனவேதான் ﷲ அதனை ஊறுதிப்படுத்திப் பின்வருமாறு கூறுகின்றான்:

ஞுவையும் இறுதி நாளையும் அஞ்சி, ﷲவை அதிகமாக நினைவு கூறக் கூடியோருக்கு(ம்) (அப்பண்புகளைக் கொண்ட

நபித்தோழர்களாகிய) உங்களுக்கு(ம்) நிச்சயமாக ﷲ வின் தூதரிடத்தில் அழகியதோர் முன்மாதிரி காணப்படுகின்றது. (அல்-குர்ஆன் 33:21)

இந்த ரீதியில் ஒருவன் எவ்வாறு முஸ்லிமாகிறான்? அவன் தனது இஸ்லாத்தைப் பறிகொடுக்கக்கூடிய செயல்கள் என்ன? அவன் முஸ்லிமாக இருப்பதற்குக் குறைந்த பட்சமாக அவன் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? முஸ்லிம்களின் கூட்டமைப்பாகிய ஜமாஅதுல் முஸ்லிமீன் எப்படித் தோன்றும்? அவர்களின் அமீர் ஆட்சியதிகாரம் உள்ளபோது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? ஆட்சியதிகாரமில்லாதபோது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? போன்றவற்றுடன் சுவனம் செல்ல முயற்சிப்போருக்குத் தேவையான முழு வழிகாட்டல்களும் ரசூலுள்ளாஹி ﷺ அவர்களின் வாழ்வில் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன.

முஸ்லிம் உம்மத்தாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனை உருவாக்குவதில் அதன் தோற்றமும் ஆட்சியதிகாரம் ﷲவிடமிருந்து கிடைக்கும் வரையிலான அதன் வளர்ச்சியுமே முதன்மையானதும் முக்கியத்துவமானதுமாகும். இதற்கான முன்மாதிரி ரசூலுள்ளாஹி ﷺ அவர்களிடமிருந்தே பெறப்பட வேண்டும். ரசூலுள்ளாஹி ﷺ அவர்களது ஆட்சியதிகாரத்திற்கு முந்திய வாழ்வைக் கவணித்தால் அங்கு ரசூலுள்ளாஹி ள தம்மை முஸ்லிம்கள் எனக் கூறுவதுடன் சுவனத்திற்காகவும் வாதாடக்கூடிய மக்களுக்கு மத்தியில் ஞவின் வேதத்தை முன்வைத்தார்கள். அக்கொள்கையை ஏற்றோரைத் தனது தலைமையின் கீழ் ஒரே சமுதாயமாகக் ரசூலுள்ளாஹி ﷺ அவர்களயழுப்பினார்கள். தலைமைத்துவத்திற்கு முடியுமானவரை கட்டப்பட்டு நடப்போம் என அவர்களிடம் பைஅத் (உறுதிப்பிரமாணம்) எடுத்தார்கள். ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் பிறந்த பூமியில் அவர்களது கொள்கையாகிய இஸ்லாத்தை வெளிப்படையாகப் பின்பற்றுவதில் தடை காணப்பட்டதனால் சுதந்திரமாக அக்கொள்கையைப் பின்பற்றக் கூடியதோர் பூமியைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

ஜாபிர் ؓ கூறினார்கள்:

ஹஜ் காலத்தின்போது ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் மக்களுக்குத் தங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார்கள். அப்படிக் கூறும்போது என்னைத் தனது கூட்டத்தாரிடம் (சத்தியத்தைக் கூறுவதற்காக ) கூட்டிச் செல்லக்கூடியவர் எவரும் இருக்கின்றாரா? ஏனெனில் எனது ரப்பின் வார்த்தைகளை எத்திவைப்பதை விட்டும் நிச்சயமாகக் குறைஷ் கோத்திரத்தினர் என்னைத் தடுத்துவிட்டனர் எனக் கூறுவார்கள். ஒருமுறை ஹம்தான் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து சத்தியத்தை ஏற்றுக்கொண்டார். பின்னர் அவரது கூட்டத்தினர் அவரைப் பின்பற்றி நடக்காமல் இருந்து விடுவார்களோ எனப் பயந்து (ரசூலுள்ளாஹி ﷺ) அவர்களிடம் வந்து எனது கூட்டத்தாரிடம் சென்று அவர்களுக்குச் செய்தியை அறிவித்துவிட்டு அடுத்த வருடம் உங்களிடம் வருகின்றேன் எனக் கூறினார். அதற்கவர்கள் சரியெனக் கூறினார்கள். அம்மனிதர் சென்றுவிட்டார். ரஜப் மாதத்தில் அன்ஸார்கள் வந்தார்கள். (அஹ்மத், திர்மிதி, நஸாஈ, ஹாகிம் - ஸஹீஹ்)

அலி பின் அபீதாலிப் ؓ கூறினார்கள்:

அறபிகளிலுள்ள கோத்திரங்களுக்குத் தன்னை(ப்பற்றி) எடுத்துக் கூறுமாறு ﷲ தனது நபிக்குக் கட்டளையிட்டதும் (அதற்காக ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள்) புறப்பட்டார்கள். நானும் அபூ பக்ர் ؓ அவர்களும் கூட இருந்தோம். அறபிகள் ஒன்றுகூடியிருக்கக்கூடிய இடத்திற்கு வந்ததும் அபூ பக்ர் ؓ முன்னால் சென்றுநீங்கள் யார்? எனக் கேட்டார்கள். அவர்களோ கோத்திரத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். அதற்கவர்கள் ரபீஆ(கோத்திரத்தை)வைச் சேர்ந்தவர்கள் எனக் கூறினர். ரபீஆவின் எந்தக் கிளையைச் சேர்ந்தவர்கள்? எனக் கெட்டார்கள். தஹ்ல் கிளை எனக் கூறிவிட்டு நீண்ட நேரம் பல விடயங்களையும் கதைத்துவிட்டு, இறுதியில் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைக் கூறிவிட்டனர். பிறகு அவ்ஸ், ஹஸ்ரஜ்களின் சபையின்பால் சென்றோம். அவர்கள்தான் ரசூலுள்ளாஹி ﷺ அவர்களால்: தங்களது கொள்கையை ஏற்று, தங்களுக்குப் புகழிடமும் அளித்து, உதவியும் செய்தததனால் அன்ஸார்கள் (உதவி செய்வோர்) எனப் பெயர் சூட்டப்பட்டவர்கள். (சத்தியத்தை முன்வைத்ததும்) ரசூலுள்ளாஹி ﷺ

அவர்களுக்கு பைஅத் செய்யாது அவர்கள் (அந்த இடத்தை விட்டும்) எழும்பவில்லை.

(ஹாகிம், அபூநஈம், பைஹகி - ஹஸன்)

மதீபாவிற்குச் சென்றதன்பின் ﷲ ரசூலுள்ளாஹி ﷺ அவர்களுக்கு ஆட்சியைக் கொடுத்தான். அங்குதான் ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் இஸ்லாத்தை அதிகாரத்துடன் பின்பற்றினார்கள். அதுவரைக்கும் இஸ்லாத்தை ஏற்று, தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படக் கூடிய ஒரு முஸ்லிம்கள் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

உலகில் எங்குமே இஸ்லாமிய ஆட்சியில்லாத இன்று ரசூலுள்ளாஹி ﷺ அவர்களின் உம்மத் பல பிரிவுகளாகப் பிரிந்திருக்கின்றது. எனவே இன்றய நிலையில் நாம் ரசூலுள்ளாஹி ﷺ அவர்கள் தங்களது ஹிலாபத்திற்கு முந்திய வாழ்வில் என்ன செய்தார்களோ அதனையே செய்யவேண்டியுள்ளது. அதாவது தூய இஸ்லாமிய அல்-குர்ஆனையும் ஸஹீஹான ஹதீஸ்களையும் முன்வைத்து, அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியோரை தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய ஒரே சமுதாயமாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

# தலைமைத்துவம் ஒரு ஆய்வு எனும் கட்டுரையின் சுருக்கம்

பி.ஜே தனது தலைமைத்துவம் ஒரு ஆய்வு எனும் கட்டுரையில் கூறியிருப்பதன் சுருக்கம் பின்வருமாறு:

இஸ்லாமிய ஆட்சி (ஹிலாபத்) இல்லாவிட்டால் தலைவரின்றி முஸ்லிம்கள் வாழ முடியும். மேலும் குர்ஆனும், ஹதீஸும் கூறுகின்ற இமாம், அமீர் எனும் வார்த்தைகள் அதிகாரம் கொண்ட கலீபாவை குறிக்குமே அன்றி, ஆட்சி அதிகாரமற்ற முஸ்லிம்களின் தலைவர்களைக்

குறிக்காது. எனவே இன்று இந்தியா போன்ற நாடுகளில் அமீரோ, இமாமே இல்லை. தங்களை அமீர் என்று கூறிக் கொள்வோர் மார்க்கத்தில் மோசடி செய்கின்றனர். பிரயாணத்திலும் அமீர் நியமிக்கப்பட வேண்டும் எனும் பொருளில் வந்திருக்கக் கூடிய ஹதீஸில் கூட்டாக தொழுகை நடத்தப்பட வேண்டும் எனும் வார்த்தை சில இடங்களிலும், வேறு சில இடங்களில் அமீர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் வந்துள்ளன. இவற்றில் சரியானது கூட்டாக தொழுகை நடத்தப் பட வேண்டும் என்பதேயாகும். ஆகவே அமீர் எனக் கூறப்படக் கூடியவர் ஆட்சியதிகாரம் கொண்டவரே. பிரயாணத்தில் கடமை அமீரை நியமிப்பது அல்ல. கூட்டாக தொழுகை நடத்துவதேயாகும்.

மேற் காணப்படுவதுதான் பி.ஜே யின் ஆய்வின் சுருக்கம். இனி அவரது ஆய்வு எந்த அளவு உண்மையானது எனர் பார்ப்போம்.

# ஆட்சியதிகாரம் அற்ற அரசியல் தலைமைத்துவம்

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தங்களது நபித்துவ வாழ்விழ் சிலகாலம் ஆட்சியதிகாரம் உள்ள ஒருவராகவும், சிலகாலம் தனது கொள்கையாகிய இஸ்லாத்தை வெளிப்படுத்துவதற்கு கூட முடியாமல் இருந்தார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும்.சத்தியத்தை நிராகரிப்பதற்காக எந்த உண்மையை மறைப்பதற்கு பி.ஜே தலைமைத்துவம் ஓர் ஆய்வு எனும் கட்டுரையில் முழுமுயற்சி செய்கிறாரோ அந்த உண்மை அவரது கட்டுரையின் ஆரம்பித்திலேயே அவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பி.ஜே தனது ஆய்வில் ரஸூல்லாஹி (ஸல்) அவர்களைப் பற்றி என்ன கூறுகின்றார் என்பதைப் பாருங்கள் :

அமீர், கலீபா, சுல்தான், அமீருல் மு.ஃ.மினீன் என்பது போன்ற வார்த்தைகளால் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படவில்லை. அதைவிட விரிந்த அதே சமயம் ஆட்சித் தலைமையையும் உள்ளடக்கிய ரஸுலுல்லாஹ் - அல்லாஹ்வின் தூதர் என்ற வார்த்தையால் குறிப்பிடப்பட்டனர். ரிஸாலத் - நுபுவ்வத் என்பதில் ஆட்சியும் அடங்கும்.

இவ்வாறு ரிஸாலத்தை அடிப்படையாக கொண்டு ரசூல் (ஸல்) அவர்கள் மட்டும் ஆட்சித் செலுத்தவில்லை. இஸ்ரவேல் மக்களையும் நபிமார்கள் இப்படித்தான் ஆட்சி செலுத்தியுள்ளார்கள்.

இஸ்ரவேலர்களை நபிமார்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு நபி மறைந்ததும் இன்னொரு நபி அவருக்கு பதிலாக பொறுப்பு வகிப்பார். எனக்குப் பிறகு எந்த நபியும் கிடையாது. கலீ.ஃ.பாக்கள் உருவாகுவார்கள். ஆனால் அவர்களின் எண்ணிக்கை அதிகப் படியாகிவிடும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதும் அல்லாஹ்வின் தூதரே (அது தொடர்பாக) எங்களுக்கு என்ன கட்டளை இடப்போகின்றீர்கள் எனக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவர்களில் முதலில் யாரிடத்தில் உடன்பனக்கை செய்தீர்களோ, அவரிடத்திலேயே அதை நிறைவேற்றுங்கள். அவர்களுடைய கடமையை அவர்களுக்குச் செலுத்திவிடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் அவர்களை கண்காணித்ததைப் பற்றி அவர்களிடமே விசாரணை செய்வான் என்று பதில் சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)
ஆதாரம் : புஹாரி

இவ்விரு ஹதீஸ்களும் ரிஸாலத் என்பதில் ஸியாஸத் (அரசியல் தலைமை) யும் அடங்கும் என்பதற்கு தெளிவான சான்றுகளாக உள்ளன.

(அல்முபீன் - மார்ச் 1999 பக் : 10,11)

ரஸுலுல்லாஹ் எனும் சொல் ஆட்சிாதிகாரம் கொண்ட நபியைக் குறிக்கப் பயன்படுத்தலாம் என்பது முற்றிலும் உண்மையே. இவ்வார்த்தை ஆட்சித் தலைமையை உள்ளடக்கக் கூடியது என்பதற்காக ரஸுலுல்லாஹி (ஸல்) ஆட்சியதிகாரம் இல்லாமல் வாழ்ந்த காலத்தில் அவர்களை ரஸுலுல்லாஹ் எனக்கூறமுடியாது என எவராவது வாதித்தால் எப்படி இருக்கும்? இஸ்லாமிய அறிவு உள்ள எவராவது இதனை சரியானது என ஏற்றுக் கொள்வார்களா? ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு எப்போது அல்லாஹ்வால் வஹி அனுப்பப் பட்டதோ அப்போது முதல் அவர்கள் ரஸுலுல்லாஹ் தான். ஆவர்களுக்கு ஆட்சியதிகாரம் இரக்கின்றதா? இல்லையா? எனும் கேள்விக்கு இடமில்லை. இதே போன்று இமாம், அமீர் எனும் வார்த்தைகள் ஆட்சியதிகாரம் உள்ளவருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை வைத்து ஆட்சி இல்லாதவருக்கு அவ்வார்த்தைகளை பயன்படுத்த முடியாது. என பி.ஜே ஒரு அறிவீனமான வாதத்தை முன்வைத்து, அந்த வாதத்தை நிருபிப்பதற்காகவே தமைத்துவம் ஓர் ஆய்வு எனும் கட்டுரை முழுவதிழும் முயற்சி செய்துள்ளார். ஆட்சித் தலைவர் எனும் பொருளைக் கொண்ட ''ரஸுலுல்லாஹ்'' எனும் சொல் ஆட்சியதிகாரம் இல்லாமலே நபியவர்களுக்கு பயன்படுத்தலாம் எனும் உண்மையை புரிந்துக் கொண்டவர், மக்கள் பின்பற்றக் கூடிய ஒவ்வொரு தலைவரையும் குறிக்கக் கூடிய இமாம் எனும் சொல் ஆட்சியதிகாரம் உள்ளவர், இல்லாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் பயன்படுத்தலாம் என்பதை புரிந்துக் கொள்ள முடியாமல் இல்லை.

இங்கு பி.ஜே யால் முன்வைக்கப்பட்டிருக்கும் ஹதீஸ்கூட அவரது வாதம் அடிப்படையே அற்றது என்பதற்கு தெளிவான ஆதாரமாகும். அந்த ஹதீஸில் பனூ இஸ்ரவேலர்களின் நபிமார்களே அரசியல் நிர்வாகத்தை நடத்தினார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பனூ இஸ்ரவேலர்களில் மிகப் பிரபலமான மூஸா (அலை), ஈஸா (அலை) போன்ற நபிமார்களுக்குகூட ஆட்சியதிகாரம் இருக்கவில்லை என்பது பகிரங்கமான உண்மை. பிர்அவ்னுக்குப் பயந்து மூஸா (அலை) முஸ்லிம்களைக் கூட்டிக் கொண்டு ஓடியது பற்றி அல்குர்ஆன் கூறுவதைப் பாருங்கள் :

(மூஸா (அலை) பிர்அவ்ன் ஆகியோரது) இரு படைகளும் ஒருவரை ஒருவர் கண்டபோது, நிச்சயமாக நாம் அகப்பட்டுக் கொண்டோம் என மூஸாவுடைய தோழர்கள் கூறினார்கள்.

(26:61)

முழு முஸ்லிம்களையும் கூட்டிக் கொண்டு, அதுவும் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஓடுகின்றவரையும் முஸ்லிம்களின் அரசியல் நிர்வாகத்தைச் செய்யக் கூடியவர் எனத் தெளிவாக ஹதீஸ் கூறுகின்றது. எனவே இந்த ஹதீஸ் நிரூபிக்கக்கூடிய உண்மை முஸ்லிம்கள் எப்போதுமே தங்களது அனைத்து விடயங்களையும் நிர்வகிக்கக் கூடிய தலைவராக தங்களில் உள்ள ஒருவரையே ஆக்கிக் கொள்வார்கள் என்பதாகும்.அந்த தலைவருக்கு ஆட்சியதிகாரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவரக்கு முஸ்லிம்கள் கட்டுப்பட்டு நடப்பார்கள். இந்த இடத்தில் பி.ஜே பனூ இஸ்ரவேலர்களில் இருந்த நபிமார்கள் ஆட்சியதிகாரம் கிடைத்த பிறகுதான் அரசியல் நிர்வாகம் செய்தார்கள் என மழுப்ப முடியாது. அதற்கு இரண்டு தடைகள் இருக்கின்றன.

ஒன்று பொதுவாக கூறப்பட்டதை குறிப்பிட்டதொரு காலத்திற்கு மட்டும் உரியது என என வரையறை செய்வதற்கு ஆதாரம் காட்ட வேண்டும். ஆத்தகைய ஆதாரம் எதுவும் பி.ஜே யிடம் கிடையாது.

இரண்டாவது பனூஇஸ்ரவேலர்களில் இருந்ததாக குர்ஆனிலும் ஹதீஸிரும் வந்திருக்கக் கூடிய ஒவ்வொரு நபிக்கும் ஆட்சியதிகாரக் இருந்தது என பி.ஜே நிரூபிக்க வேண்டும். இதுவும் பி.ஜே யால் முடியாத ஒன்றேயாகும்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆட்சியதிகார்சூம் இல்லாமலே முஸ்லிம்களின் அரசியல் நிர்வாகத்தை நடாத்தியருக்கின்றார்கள். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் பயந்து, அதிகமாக அல்லாஹ்வை நினைவு கூறக்கூடியோருக்கு ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது என அல்லாஹ் கூறுகின்றான். எனவே இதன் மூலம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் தோன்றக்கூடிய முஸ்லிம்களின் தலைவராகிய அமீர் அல்லது இமாம் ஆட்சியதிகாரம் இல்லாமலே முஸ்லிம்களின் சகல நிர்வாகத்தையும் நடாத்தலாம் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபனமாகின்றது.

சத்தியத்தை தெரிந்திருந்தும் தான் இருக்கும் வழிகேட்டை நிரூபிப்பதற்கு இஸ்லாத்தில் குழறுபடி செய்யும் முயற்சியாகிய தலைமைத்துவம் ஓர் ஆய்வு எனும் கட்டுரையின் துவக்கத்திலேயே அல்லாஹ் இவ்வாறு அசத்தியவாதியான பி.ஜே யின் கையினால் அவரது வாதத்தினை தரைமட்டமாக்கக் கூடிய உண்மையை எழுதச் செய்துள்ளான்.

# ஆட்சியதிகாரம் இன்றி அமீராக முடியுமா?

ரஸூலுல்லாஹி (ஸல்) கூறுகின்றார்கள் :

நீங்கள் பிரயானத்தில் மூவர் இருந்தாலும் உங்களில் ஒருவரை அமீர் ஆக்கிக் கொள்ளுங்கள். அவர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட அமீரேயாவார்.

(அறிவிப்பவர் : உமர் ஆதாரம்: பஸ்ஸார் - ஸஹீஹ்)

ரஸூலுல்லாஹி (ஸல்) கூறுகின்றார்கள் :

யார் தனக்கென ஜமாஅத்திற்கான ஓர் இமாம் இல்லாத நிலையில் மரணிக்கிறாரோ, நிச்சயமாக அவரது மரணம் ஜாஹிலிய்ய மரணமேயாகும்.

(முஸ்தத்ரக் ஹாகிம் - ஸஹீஹ்)

ரஸுலுல்லாஹி (ஸல்) கூறுகின்றார்கள் :

மூன்று பேர் பிரயானத்தில் சென்றாலும் அவர்களில் ஒருவரை அவர்களுக்கு அமீராக ஆக்கிக் கொள்ளட்டும்.

(அபூதாவுத் - ஹசன் ஸஹீஹ்)

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஹதீஸ்கள் ஒவ்வொன்றும் முஸ்லிம்கள் மூன்று பேருக்கு குறையாமல் இருந்தால் அவர்கள் தமக்கென ஒரு அமீரை ஏற்படுத்துவது கடமை எனவும் அப்படி ஒரு அமீர் இல்லாமல் மரணிப்பது ஜாஹிலிய்யத்தில் மரணிப்பதாகவும், பிரயானத்தின் போதும், பாலைவனத்தில் இருக்கும் போதும் கூட முஸ்லிம்கள் அமீரின்றி இருத்தல் ஆகுமானதல்ல எனத் தெளிவாக கூறுகின்றன.

இந்த இடத்தில் தான் தலைமைத்துவத்திற்குரிய மற்றுமொரு தகுதியாக அமீர் ஆட்சியதிகாரங்கொண்ட ஹலீபாவாக இருக்க வேண்டும் என பீ.ஜே குர்ஆனிலோ, ஹதீஸிலோ இல்லாத ஒரு நிபந்தனையை முன்வைக்கிரார். இவர் முன்வைத்த சுய கருத்து உடைந்து விடும் என்பதற்காக மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று ஹதீஸ்களில் அபூதாவூதிலே வந்திருக்கக் கூடிய ஹதீஸின் வாசகத்தை பி.ஜே குழுறுபடி உள்ளளதாக காட்ட முயற்சிக்கிரார். ஏனெனில் பிரயானத்தில் மூவர் இருக்கும் போது ஒருவர் அமீராக நியமிக்கப்படுவதென்றால், அவருக்கு ஆட்சியதிகாரம் இருக்காது என்பதை அவரே தனது ஆய்வில் ஒப்புக் கொண்டுள்ளார். அந்த ஹதீஸின் வாசகம் பற்றி பி.ஜே கூறுவதாவது :

*மேலும் முஹம்மத் பின் அஜ்லான் என்ற அறிவிப்பாளர் நாபிஉ என்பார் வழியாக அறிவிக்கும் ஹதீஸ்களில் வார்த்தைக் குழப்பம் உள்ளது என்று உகைலி என்ற ஹதீஸ்கலை அறிஞர் குறிப்பிடுகின்றார். அபூதாவூதில் இடம்பெறும் ஹதீஸை மஹம்மத் பின் அஜ்லான் நாபிஉ வழியாகவே அறிவிக்கிரார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*எனவே முஹம்மத் பின் அஜ்லான் வழியாக மற்றவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்களில் மூவர் பயனம் சென்றால் ஒருவர் இமாமத் செய்யட்டும் என்றே கூறப்பட்டுள்ளது.*

*மேலும் அபூசயீத் (ரலி) அறிவிக்கும் மற்றொரு ஹதீஸ் முஸ்லிமில் இடம்பெற்றுள்ளது. மூவர் இருந்தால் ஒருவர் இமாமத் செய்யட்டும் என்று தான் அந்த ஹதீஸிலும் கூறப்படுகிறது.*

*ஆகவே பிரயாணத்தில் செல்பவர்கள் தனித்துத் தோழுது விடாமல் மூவரில் ஒருவரை இமாமாக ஏற்படுத்தித் தொழ வேண்டும் என்பது தான் சரியான அறிவிப்பாகும். பயனத்தில் அமீர் ஏற்படுத்துங்கள் என்பது சரியான அறிவிப்பாகாது. இப்னு அஜ்லான் நாபிஉ என்ற வழியாக அமைந்திருப்பதே இவ்வாரு முடிவு செய்ய போதுமான காரணமாகும்.*
*(அல்முபீன் - 1999 மார்ச் பக்- 43)*

இந்த வாதத்தில் பல தவறான அம்சங்கள் உள்ளன.

01. அபூதாவூதிலே வரக்கூடிய ஹதீஸ் பற்றிய பி.ஜே யின் ஆய்வு தவரானதாகும். அந்த ஹதீஸில் அவர்களில் ஒருவரை அமீராக்கிக் கொள்ளட்டும் என்ற வாசகம் ஏற்கக்கூடிய ஒன்றே என்பதுதான் சரியான முடிவாகும். ஆண்மையில் வாழ்ந்து மரணித்த ஹதீஸ்கலை அறிஞர் நாஸுருதீன் அல்பானி என்பரும் அவர்களில் ஒருவரை அமீராக்கிக் கொள்ளட்டும் எனும் அதே வாசகத்துடன் இந்த ஹதீஸை ஹசன் - ஸஹீஹ் எனும் ஏற்றுக் கொள்ள முடியுமான தரத்தில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.
(பார்க்க: ஸஹீஹ் அபூதாவூத் 2272, 2273)

02. அபூதாவூதிலே வரக்கூடிய இந்த ஹதீஸ் பற்றி அலசும் போது இமாம் ஷவ்கானி அவர்கள் பின்வருமாரு கூறினார்கள் :

இதே போன்ற அறிவிப்பை ஸஹீஹான அறிவிப்பாளர் வரிசையுடன் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறியதாக உமர் (ரலி) அவர்களும், அவர்களது மகன் அப்துல்லாஹ் (ரலி) அவர்களும் அறிவிக்கும் இர அறிவுப்புகள் பஸ்ஸார் எனும் நூலிலும், இப்னு மஸ்ஊத் (ரலி) மூலமாக ஓர் அறிவிப்பு ஸஹீஹான அறிவிப்பாளர் வரிசையுடன் தபரானியிலும் பதிவாகியுள்ளன. இந்த ஹதீஸ்களில் ஒன்று மற்றொன்றிற்கு சான்று பகர்கின்றது. (அபூதாவூதின் அறிவிப்பாகிய ) ஆபூ ஸயீத் (ரலி), அபூஹுரைரா (ரலி) வாயிலாக அறிவிக்கப்படும் இரு ஹதீஸ்கள் பற்றி இமாம் அபூதாவூத், இமாம் முன்திரி மௌனம் சாதித்துள்ளனர். இவ்விரண்டு அறிவிப்பாளர்களும் அலி இப்னு பஹ்ரைத்விர புஹாரி, முஸ்லிமின் அறிவிப்பாளர்களாவர். அவரும் ஞாபக சக்தி நிறைந்த நம்பகமானவர்.

இமாம் ஷவ்கானி சுட்டிக்காட்டிய ஒவ்வொரு அறிவிப்பிலும் ஒருவரை அமீராக ஆக்கிக் கொள்ளட்டும் எனக் காணப்படுகிறது. எனவே தான் இமாம் ஷவ்கானி அவர்கள் அனேகமானோர் தலைமைத்துவம் காணப்படுவது கடமை எனக் கூறுகின்றனர். அவர்களுக்கு இவற்றில் ஆதாரம் இருக்கின்றது எனும் கருத்தை கூறுகின்றார்கள்.

(நைலுல் அவ்தார் - கி. ஆக்ழியா வல் அஹ்காம்)

பிரயானத்தில் கூட மூவர் இருந்தால் ஒருவரை அமீலாக்கிக் கொள்ளுங்கள் எனும வாசகம் கொண்ட ஹதீஸ்களில் பி.ஜே சுட்டிக்காட்டியது உட்பட பல அறிவிப்புகள், முன்னால் அதாரபூர்மானவைகளாக நீருபிக்கப்பட்டுவிட்டதால் ஆட்சியதிகாரம் இன்றி அமீரோ இமாமே இல்லை எனும் வாதம் உடைந்துவிட்டது. ஏனெனில் ஆட்சியதிகாரம் ஒரு நிபந்தனையா இல்லையா என்பதை தீர்மானிப்பதில் இது மிக முக்கியமானதாகும். பிரயானத்திலிரக்கக் கூடிய ஒரு அமீரிடம் ஆட்சியதிகாரம் இருக்காது என்பதை பி.ஜே யும் ஏற்றுள்ளதால் முஸ்லிம்களின் அமிராக இருப்பவரிடம் ஆட்சியதிகாரம் இருக்கவேண்டியது அவரது தகுதிகளில் ஒன்றாக குறிப்பிடப்படுவது மிகப் பெரிய தவறு என்பது தெளிவாகிவிட்டது. அவர்களில் ஒருவரை அமீராக்கிக் கொள்ளட்டும் எனக்கூறி, ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள்

ஆட்சியதிகாரம் இல்லாதவருக்கு அமீர் எனும் வார்த்தை பயன்படுத்தப்படும் எனும் வாதமும் உடைந்து விடுகின்றது.

03. தனக்கென இமாம் இல்லாத நிலையில் எவர் மரணிக்கிறாரோ அவர் ஜாஹிலிய்யத்தில் மரணிக்கிரார் எனும் ஹதீஸ் பொதுவான சட்டமேயன்றி, இஸ்லாமிய ஆட்சியதிகாரம் காணப்படும் போது அமீர் இல்லாமல் மரணிப்பது தான் ஜாஹிலிய்ய மரணம் எனப் பிரிப்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. எனவே குழப்பத்திற்குரிய வாசகங்கள் எனக்கூறி இஸ்லாத்தின் அடிப்படை அம்சத்தை மறுக்க முயற்சி செய்த பி.ஜே உடைய கூற்று தவறானது என்பது நிரூபனமாகிவிட்டது. சத்தியத்தைத் தெரிந்துக் கொண்டும் பி.ஜே தனது தவறிலேயே அடம் பிடிக்க முடியாதவாறு அவர் குறிப்பிட்டதல்லாத பிரயாணத்தில் செல்லக் கூடியோர் மூன்று பேர்களாக இருந்தால் ஒருவரை அமீராக நியமிக்க வேண்டும் எனக் கட்டளையிடக் கூடிய வேறு ஹதீஸ்களையும் முன்வைத்துள்ளோம். இதன் பிறகாவது பி.ஜே சத்தியத்தை ஏற்றுக்கொள்வாரா ?

பி.ஜே தனது ஆய்வில் அதிகாரம் இல்லாமல் இமாமோ அமீரோ இல்லை எனத் தலைப்பிட்டு, அத்தலைப்பின் கீழ் பல சிறு சிறு தலைப்புக்களிட்டு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஆட்சியதிகாரம் இருந்ததைப் பற்றி குறிப்பிடக்கூடிய ஹதீஸ்களை குறிப்பிட்டுள்ளார். துனி மனிதராக இருந்த ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சத்தியத்தை சொன்னதன் காரணமாக, அதனை நபியவர்களிடம் ஓரிருவராக பைஅத்துச் செய்து ஏற்றனர். இவ்வாறு தோன்றிய ஜமாஅத்துல் முஸ்லிமீன் பிற்பட்ட காலத்தில் ஆட்சியதிகாரமுள்ள நிலையை அடைந்தது என்பதை எவரும் மறுப்பதில்லை. சர்ச்சை என்னவென்றால் ஆட்சியதிகாரம் முஸ்லிம்களின் அமீராக இரப்பவரக்கு ஒரு நிபந்தனையா ? என்பது தான். பி.ஜே பல ஹதீஸ்களை முன்வைத்து சர்ச்சைக்கு அப்பாற்பட்ட விடயமான ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு காலத்தில் ஆட்ரியதிகாரத்தோடு காணப்பட்டார்கள் என்பதை நிரூபித்திருக்கின்றார். தன்னுடைய ஆதாரங்கள் சர்ச்சைக்கு அப்பாற்பட்டது என்பதை உணராமல் பி.ஜே இங்கு அந்த ஆதாரங்களை முன்வைத்துள்ளாரா ....? அல்லது அவரது வழமைப்படி ஒருசாரார்

தன்னை நம்பி ஏமாற வேண்டும் எனும் எதிர்பார்ப்பில் தான் இத்தகையதோர் முயற்சியை செய்தாரா ?

சர்ச்சை ஹலீபா எனும் நிலையை அடையாத முஸ்லிம்களின் அமீருக்கு கட்டுப்படுவது கடமையா? இல்லையா? ஏன்பதே. ஜமாஅத்தின் இமாமிடம் பைஅத் செய்யாமல் மரணிப்பது ஜாஹிலிய்ய மரணம் எனப் பொது வாக ரஸூலுல்லாஹி (ஸல்) கூறியதன் பின் ஹலீபாவல்லாத தலைவரக்கு கட்டுப்படுவது கடமையல்ல என்பதற்கு ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது ஹதீஸிலிருந்து ஆதாரம் காட்டப்பட வேண்டும். முஸ்லிம்களுக்கு ஆட்சியதிகாரம் இல்லாத காலத்தில் இமாம் இருந்தும் அவருக்கு கட்டுப்படுவதாக பைஅத் செய்யாமல் மரணிக்கக் கூடியவர் முஸ்லிமாகவே மரணிக்கின்றார் எனும் பொருள் கொண்ட குர்ஆன் வசனம் முன்வைக்கப்பட வேண்டும். ஆவ்வாரில்லாது நாம் நினைத்தபடி சட்டங்களை பாகுபடுத்தும் உரிமை எவருக்குமில்லை.

# இமாம் என்பதன் பொருள்

ஹாமீம். தெளிவான இவ்வேதத்தின் மீது சத்தியமாக, நீங்கள் புரிந்துக் கொள்ளும் பொருட்டு இந்த அல்குர்ஆனை அறபு மொழியில் ஏற்படத்தி இருக்கிறோம். (43:1,2,3)

எந்தவொரு அறபுச் சொல்லிற்கும் விஷேடமானதொரு பொருள் இஸ்லாமிய ஷரீஅத்தில் கூறப்படாத படசத்தில் அறபு மொழியிலே அச்சொல்லுக்கு என்ன பொருள் காணப்படுகின்றதோ அப்பொருளைக கருத்தாக கொண்டே அல்குர்ஆன் இரக்கப்பட்டுள்ளது என மேற் கண்ட அல்குர்ஆன் வசனம் குறிப்பிடுகின்றது.

இமாம் என்ற சொல்லுக்கு இஸ்லாம் விஷேடமான பொருளைக் கூறாததால் அறபு மொழியில் அச்சொல்லின் பொருள் பின்வருமாறு :

இமாம் : 01. ரயீஸ் அல்லது அவரல்லாத பின்பற்றக் கூடியவர்.

(முஹீதுல் முஹீத் - அறபு அகராதி)

01. பின்பற்றக் கூடியவர். அதாவது அவர் செய்வதைப் போன்று செய்யப்படக் கூடியவர்.
02. முன்மாதிரியாக கொள்ளப்படக்கூடியது.
03. தேளிவான பாதை.

(முன்ஜித் - அறப அகராதி)

அம்ம எனும் சொல்லிற்கு பிறந்ததே இமாம் எனும் சொல். அம்ம என்பதன் பொருள் முன்நின்று வழிநடத்தினான் என்பதாகும். எனவே இமாம் எனும் சொல் மொழி ரீதியாக முன்நின்று வழிநடாத்தக் கூடிய ஒவ்சொரவரக்கும் பயன்படுத்த முடியுமான ஒரு சொல்லாகும். இப்படிப் பயன்படுத்துவதற்கு இஸ்லாம் ஏதேனும் நிபந்தனை இடுவதாக கூறுவதானால் அதற்கான ஆதாரம் மன்வைக்கா்ாட வேண்டும். இமாம் எனும் சொல் ஆட்சியாளருக்கு மடடுமே பயன்னடுத்தப்படும் என்பதற்கோ, அல்லது தொழுகை நடாத்துபவரக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதற்கோ குர்ஆன், ஹதீஸ், மொழி ஆகிய எந்த ஒன்றிலும் ஆதாரம் கிடையாது. ஆட்சியாளருக்கு அல்லது தொழகை நடாத்துபவருக்கு இச்சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதால் : இவர்களை மாத்திரமே இச் சொல் குறிக்கும் என வாதிடுவது நகைப்புக்குரியது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த உம்மத்தின் முதல் ஹலீபாவும் அறபை தாய் மெழியாக கொண்டவர்களுமாகிய அபூ பக்ர் (ரலி) இமாம் எனும் வார்த்தையை விளக்குவதைப் பாருங்கள்.

கைஸ் பின் அபி ஹாசிம் அறிவிக்கிறார்கள்:

அஹ்மஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஸைனபின்துல் முஹாஜிர் என அழைக்கப்படும் பெண்ணிடம் (ஒருமுறை) அபூபக்கர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்பென் கதைக்காமல் இருப்பதைப் பார்த்துவிட்டு, ஏன் கதைக்காமல் இருக்கின்றாள்? எனக் கேட்டார்கள். கதைக்காமலே ஹஜ் செய்கிறாள் எனக்கூறினார். அப்பெண்ணை நோக்கி கதைப்பாயாக! நிச்சயமாக இது ஆகுமானதல்ல. இது ஜாஹிலிய்ய செயலில் நின்றும் உள்ளதாகும் எனக் கூறினார்கள். உடனே (அப்பெண்) கதைத்தாள். நீங்கள் யார் எனக் கேட்டாள். முஹாஜிர்களில் ஒருவன் எனக் கூறினார்கள். எந்த முஹாஜிர்கள்? எனக் கேட்டாள். குரைஷிகளில் உள்ளவர்கள் எனக் கூறினார்கள். குறைஷிகளில் நீங்கள் எந்தக் கிளையை சேர்ந்தவர்? ஏனக் கேட்டாள். நிச்சயமாக நீ அதிகம் கேள்வி கேட்கக்கூடியவள். நான் அபூபக்கர் (ரலி) எனக்கூறினார்கள். ஜாஹிலிய்யத்தின் பிறகு அல்லாஹ் ஏற்படுத்திய இந்த சிறந்த ஆட்சியதிகாரத்தில் நாம் எதுவரக்கும் நிலைத்திருப்போம்? ஏனக் கேட்டாள். உங்களின் இமாம்கள் உறுதியுடன் இருக்கும் காலம் வரை நீங்கள் அதில் நிலைத்திருப்பீர்கள். எனக் கூறினார்கள். இமாம்கள் என்போர் யார்? ஏனக் கேட்டாள். உனது கூட்டத்தாருக்கு ரயீஸ்களும், மதிப்புக்குரியவர்களும் : அவர்கள் இவர்களுக்கு ஏவுவார்கள், இவர்கள் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். (அத்தகையவர்கள்) இருக்கவில்லையா? எனக் கேட்டார்கள். அதற்கவள் ஆம் எனக் கூறினாள். அவர்களே தான் (ஆனால் குறிப்பிட்ட கோத்திரத்திற்கல்லாது இமாம்களாகிய) அவர்கள் மக்களுக்கென இரப்பார்கள் எனக் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி- கி.ம அன்சார்: 3834)

ஆபூபக்கர் இமாம்கள் என்போர் யார்? ஏனக் கேட்கப் பட்ட போது பி.ஜே யின் கண்டுபிடிப்புக்களில் எதனையும் குறிப்பிடவில்லையே....?

அறப அகராதியில் எப்படி இமாம் எனும் சொல்லிற்கு ரயீஸ் என உதாரணம் காட்டப்பட்டுள்ளதோ அதே போன்று தான அபூபக்கர் (ரலி) அவர்களும் ரயீஸ்கள் என விளக்குகிரார்கள். ரயீஸ் என்றால் ஆட்சியதிகாரம் இல்லாத தலைவர் என்பதை பி.ஜே யும் ஏற்றிருகின்றார்.

(பார்க்க : அல்முபீன் -99 மார்ச் பக்: 51)

பி.ஜே மதிப்பதாக கூறும் அபூபக்கர் (ரலி) அவர்களின் தெளிவான விளக்கத்திற்கு பிறகாவது பி.ஜே தவ்பாச் செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வாரா? அல்லாஹ் தான் அவருக்கு சத்தியத்தை ஏற்கக் கூடிய மணப்பக்குவத்தைக் கொடுத்து அவரை நரகிலிரந்து பாதுகாக்க வேண்டும். அதுவே எமது பிரார்த்தனையாகும்.

ஆட்சியதிகாரம் உள்ளவரை மாத்திரமே இமாம் அல்லது அமீர் எனக் குறிப்பிடலாம் எனும் இடிந்து வீழ்ந்துவிட்ட கற்பனைக் கோட்டையின் அடையாளம் கூட இருக்கக் கூடாது என்பதற்காக இமாம் எனும் சொல் ஆட்சியதிகாரம் எனும் எவ்வித நிபந்தனையுமில்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு ஹதீஸையும் குறிப்பிடுகின்றோம் :

ரஸூலுல்லாஹி (ஸல்) கூறினார்கள் :

நிச்சயமாக நான் உனது உம்மத்தினர் மீது பயப்பபடுவதெல்லாம் வழிகெடுக்கக் கூடிய இமாம்களைப் பற்றியே ஆகும்.

(திர்மிதி-ஸஹீஹ், ஸி.அ. ஸஹீஹா: 1582)

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது உம்மத்தை வழிகெடுக்கக் கூடிய தலைவர்களை ரஸூலுல்லாஹி (ஸல்) இமாம்கள் எனக் கூறியுள்ளார்கள். இங்கு ஆட்சியதிகாரத்துடன் உள்ள தலைவர்கள்தான்

வழிகெடுப்பார்கள் என்பது பொருளல்ல. மாறாக மார்க்கம் எனும் பெயரில் மக்கள் நம்பிப் பின்பற்றும் போது அவர்களுக்கு நேர்வழியாகிய குர்ஆனையும் ஹதீஸையும் கற்பிக்காது, அவையல்லாதவற்றைக் கூறி மக்களை வழிகெடக்கக் கூடிய ஒவ்வொர தலைவரையும் பற்றி ரஸூலுல்லாஹி (ஸல்)தனது உம்மத்தினரை எச்சரிக்கின்றார்கள். இந்த ஹதீஸூம் எனக் கூறப்படுவதற்கு ஆட்சியதிகாரம் ஒரு நிபந்தனையல்ல எனும் உண்மையை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்களில் ஒன்றாகும். இங்கு வழி கெடுக்கும் இமாம்கள் என்றதும் அவர்கள் ஆட்சியதிகாரம் கொண்டவர்களாகத்தான் இருப்பபார்கள் எனும் கருத்தை தீனிலே சுய கருத்தைப் புகுத்தும் பி.ஜே யால் கூட கூற முடியாது. எனவே தான் பி.ஜே இமாம் எனும் சொல்லுக்கு புதுக்கருத்து ஒன்றையும் உருவாக்கியுள்ளார். அல் குர்ஆனிலே அக்கருத்தை எப்படித் திணிக்கிறார் எனப் பாருங்கள்.

*அல்குர்ஆனை ஆய்வு செய்கையில் இமாம் என்ற வார்த்தை வழிகாட்டி, பிரமுகர் என்ற அர்த்தத்திலும் இடம் பெற்றுள்ளது.*

நிராகரிப்பின் இமாம்களோடு போர் செய்யுங்கள்.

(அல் குர்ஆன் 9:12)

(இப்ராஹிமே) நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக ஆக்குகிறேன் என்று கூறினான். (அல்குர்ஆன் 2:124)

இன்னும் நம் கட்டளைகளைக் கொண்டு (மக்களுக்கு) நேர்வழி காட்டும் இமாம்களாக நாம் அவர்களை ஆக்கினோம்.

(அல்குர்ஆன் 21:73)

மேலும் அவர்கள் எங்கள் இறைவா! ஏங்கள் மனைவியரிடமம் எங்கள் சந்ததியினிடமிருந்து எங்களுக்கு கண்குளிர்ச்சியை

அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக ஆக்கியருள்வாயாக! ஏனப் பிரார்த்தனை செய்வார்கள்.

(அல்குர்ஆன் 26:74)

*மேற்கண்ட வசனங்களிலும் இமாம் என்ற வார்த்தை வழிகாட்டி பிரமுகர் என்ற பொருளில் பயன்பட்டுள்ளதைக் காண்கிறோம்.*

*(அல் முபீன் 1990 மார்ச் - பக்கம் 14)*

இங்கு பி.ஜே பிரமுகர் எனும் பொருளில் வந்துள்ளததாக குறிப்பிடுவது: அவர் சுட்டிக் காட்டியிருக்கும் முதலாவது (9:12) வசனத்தையேயாகும். ஏனைய வசனங்கள் மூன்றும் அவரது கருத்துப்படி வழிகாட்டி எனும் பொருள் கொண்டவைகளாகும். பிரமுகர் எனும் பொருள் தான் பி.ஜே புதிதாக புகுத்த முயலும் கருத்தாகும். இமாம் எனும் சொல்லிற்கு பிரமுகர் எனும் பொருள் எந்த அகராதியில் காணப்படுகிறது ? அல்லது இப்பொருளை நிரூபிக்க்கூடிய ஆதாரம் குர்ஆன் ஹதீஸில் எங்கு காணப்படுகிறது? இதுவே எமது கேள்வியாகும். பி.ஜே யால் பதில் கூற முடியுமா?

இலங்கை உலமா சபைத் தற்போதைய தலைவர் உட்பட, இலங்கை அன்ஸாருஸ் ஸுன்னா எனும் பிரிவின் தலைவராலும் அப்பிரிவிலுள்ள மற்றும் சில உலமாக்களாலும் வார்த்தைப் பிரயோகத் தவறுகள் அற்றது என உத்தரவாதம் அளிக்கப்பட்டு, சவூதி அரேபிய அரசாங்கத்திால் அச்சிடப்பட்டுள்ள குர்ஆன் மொழி பெயர்ப்பில் பி.ஜே சுட்டிக்காட்டும் வசனத்தின் மொழி பெயர்ப்பைப் பாருங்கள் :

நிராகரிப்போரின் தலைவர்களுடன் போரிடுங்கள். (9:12)

தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டோர் மிக அதிகமாகப் பயன்படுத்தும் அல்குர்ஆனிய மொழி பெயர்ப்பாகிய அப்துல் ஹமீது பாகவி அவர்களின் மொழி பெயர்ப்பிரும் இச் சொல் எவ்வாறு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைப் பாருங்கள் :

நிராகரிப்போரின் தலைவர்களுடன் போரிடுங்கள். (9:12)

மற்றொரு மொழி பெயர்ப்பாகிய டாக்டர் முஹம்மத் ஜான் அவர்களின் மொழி பெயர்ப்பும் பின்வறுமாரு காணப்படுகின்றது:

நிராகரிப்போரின் தலைவர்களுடன் போர் புரியுங்கள். (9:12)

பி.ஜே கூறுவது போல் ஒருவர் கூட இங்கு இமாம் எனும் சொல்லிற்கு பிரமுகர் எனும் பொருள் கொடுக்காதது ஏன் ? உண்மை என்னவெனில் அச்சொல்லிற்கு அப்படி ஒரு பொருள் கிடையாது. எனவேதான் அனைவருமே தலைவர்கள் என மொழி பெயர்த்துள்ளனர். பி.ஜே மாத்திரம் தான் அவர் தப்பிக் கொள்வதற்காக குர்ஆனிலே அவருக்கு தெவையான கருத்தைப் புகுத்துகிறார். கப்ர் வணக்கம் செய்வோர், மத்ஹப்களைப் பின்பற்றுவோர் தங்களது தவறுகளை உணர்ந்து திர்த வேண்டும் எனக் கூறி முழக்கமிடும் பி.ஜே யின் நிலை தான் இது. ஆவர் செய்யக் கூடிய தவறு தெளிவாக நிரூபிக்கப்பட்ட பின்னர் அவரது தவரை சரியென மாற்றுவதற்காக அல் குர்ஆனிய வசனங்களையே மாற்ற முயற்சிக்கின்றார். அல்லாஹ் தான் இத்தகைய வழிகெடுக்க கூடிய தலைவர்களை விட்டும் பாமர மக்களை காப்பாற்ற வேண்டும்.

பி.ஜே மேலே குறிப்பட்டுள்ளது போன்று பிரமுகர் எனும் பொருளில் அல்குர்ஆனில் எந்தவொரு இடத்திலும் இமாம் எனும் சொல் பயன் படுத்தப்படவில்லை. இமாம் எனும் சொல்லிற்கு பிரமுகர் எனும் பொருளே இல்லை எனும் போது அப்பொருளில் எப்படிப பயன்படுத்த முடியும்? இமாம் எனும் சொல்லிற்கு பிரமுகர் எனும் பொருள் பி.ஜேயால் புகுத்தப்பட்டது தான் என்பது இன்னும் உறுதியாகும் பொருட்டு அல்குர்ஆனில் இமாம் எனும்சொல் வரக்கூடிய எவ்வொரு வசனத்தையும் இங்கு தருகின்றோம்.

(ஷுஐபுடைய மக்களாகிய) தோப்புடையோரும் நிச்சயமாக அக்கிரமக்காரர்களாகவே இருந்தனர். ஆகவே அவர்களிடமும் நாம் பழி வாங்கினோம். (அழிந்த) இவ்விரு (மக்களின்) ஊர்களும் பகிரங்கமான வழியில் தான் இருக்கின்றன.

(15: 78,79)

நிச்சயமாக நாமே மரித்தோரை (மறுமையில்) உயிர் கொடுத்து எழுப்புவோம். ஆவர்கள் செய்த அனுப்பியவைகளையும் அவர்கள் விட்டுச் சென்றவைகளையும் நாம் எழுதுகின்றோம். இவை ஒவ்வொன்றையும் தெளிவான ஏட்டில் பதித்தே வைத்திருக்கின்றோம். (36 : 12)

அன்றி நாம் அவருக்கு (அவரது) கோரிக்கையின்றியே இஸ்ஹாக்கையும், ய.்.கூபையும் அருள்புரிந்தோம். இவர்கள் யாவரையும் நல்லடியார்களாகவும் நாம் ஆக்கினோம். ஆன்றி நம் கட்டளைகளை (ஜனங்களுக்கு) ஏவி, நேரான வழியை அறிவிக்கக் கூடிய தலைவர்களாகவும் ஆக்கினோம்.

(21: 72,73) இதே பொருளில் (17 : 71)

இதற்கு முன்னர் மூஸாவுடைய வேதம் (ஜனங்களுக்கு) வழி காட்டியாகவும், அருளாகவும் இருந்தது.

(46 : 12) இதே பொருளில் (11 : 17)

உடன்படிக்கை செய்கு கொண்டதன் பின்னரும் அவர்கள் தங்களுடைய சத்தியங்களை முறித்து, உங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் குற்றங் குறைகள் கூறிக் கொண்டிருந்தால் (நிச்சயமாக) நிராகரிப்போரின் (இத்தகைய) தலைவர்னளுடன் போரிடுங்கள்.

(9 : 12) இதே பொருளில் (28 : 5) , (32 : 24)

இன்னும் இப்ராஹீமை அவரது ‘‘ரப்’’ பல கட்டளைகளைக் கொண்டு சோதித்த போது, அவர் அவற்றைப் பூரணப்படுத்தினார். நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு முன்மாதிரியாக ஆக்குகின்றேன். என அல்லாஹ் கூறினான்.

(2 : 124)

மேலும் அவர்கள் எங்கள் இறைவனே! எங்கள் மனைவிகளையும், எங்கள் சந்ததிகளையும் எங்களுக்கு கண்குளிர்ச்சியாக்கித் தந்தருள்வாயாக! அன்றி பரிசுத்தவான்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை ஆக்குவாயாக! ஏன்று பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்.

(25 : 74)

இமாம் எனும் சொல் வரக்கூடிய இந்த அல்குர்ஆனிய வசனங்களில் எந்தவொரு இடத்திலும் பிரமுகர் எனும் பொருளில் அச் சொல் பயன்படுத்தப்படவில்லை. இமாம் எனும் சொல் வரக்கூடிய வேறு வசனங்களும் நாம் அறிந்த வரையில் குர்ஆனில் இல்லை. எனவே இமாம் எனும் சொல்லிற்கு பிரமுகர் எனும் பொருள் பி.ஜே யின் கற்பனையே தவிர அதில் எவ்வித உண்மையுமில்லை.

ஆகவே தலைமைத்துவத்திலிருந்து ஆரம்பமாகக் கூடிய ஜமாஅத்துல் முஸ்லிமீனை (முஸ்லிம்களின் கூட்டமைப்பு) வழி நடாத்தக் கூடிய அமீரை ஆட்சியதிகாரமுள்ள, இல்லாத எல்லா நிலைகளிலும் இமாம் எனும் பெயர் கொண்டு அழைக்கலாம் என்பது தெளிவாகின்றது.

ஒருவரை இமாமென அழைப்பதற்கு அவருக்கு அறபுமொழி ரீதியாக ஆட்சியதிகாரம் ஒரு நிபந்தனையல்ல என்பதை நாம் மேலே அறபு அகராதிகளில் இருந்து நிரூபித்துள்ளோம். அதில் முதலாம் அகராதியில் இமாம் என்பதற்கு ஒத்தக் கருத்துச் சொல்லாக ரயீஸ் எனும் சொல் உதாரணமாக காட்டப்பட்டுள்ளது. ரயீஸ் என்பவர் ஆட்சியதிகாரம் இல்லாத தலைவர் என்பதை பி.ஜே இவ்வாறு ஏற்கிறார் :

*இதுபோல் ஹதீஸ்களில் அதிகாரம் இல்லாதவர்களை, ஆட்சி இல்லாதவர்களைத் தலைவர் ஸய்யித் என்ற வார்த்தையால் அழைக்கப்படுவதைக் காண்கிறோம். இன்றைய சங்கங்கள், ஜம்இய்யாக்கள் இயக்கங்களில் உள்ள தலைவர்களை ஸய்யித் என்றோ அல்லது இதுபோன்ற பொருளைக் கொண்ட ரயீஸ் என்று அழைக்கலாமே தவிர அமீர் என்று அழைப்பது பொருத்தமாகாது.*

*(அல்முபீன் -1999 மார்ச் பக்கம்: -51)*

ரயீஸ் எனும் சொல் ஆட்சியதிகாரம் இல்லாத தலைவரைக் குறிக்கும் என்பதைக் கூறிவிட்டு, இமாம் எனும் என்னும் சொல்லும் அதே

பொருளைக் கொண்டது என்பதை அகராதிகள் கூறும் போது மட்டும் பி.ஜே அதனை மறக்கின்றார்.

ஹதீஸிலும் கூட இமாம் எனக் கூறப்படுவதற்கு ஆட்சியதிகாரம் ஒரு நிபந்தனையாக எங்கும் கூறப்படவில்லை. பி.ஜே தனது வழக்கப்படி, தான் கூறக்கூடிய சுயகருத்தை நிரூபிப்பதற்கு உண்மைக்கு மாற்றமான ஒன்றைச் சொல்லி பின்வருமாறு ஏமாற்ற முயற்சிக்கின்றார்.

*மன்னர் என்ற கருத்தில் அமைந்த இமாம் என்ற பதத்தை மட்டும் நாம் எடுத்துக் கொள்வோம்.*

*அல்லாஹ்வின் திருத்தூதர் என்ற பதத்தில் நேரடியாக ஆட்சியும் அதிகாரமும் உள்ளடங்காவிட்டாலும் நபி (ஸல்) அவர்கள் அதிகாரம் படைத்த ஆட்சித்தலைவராகவே இருந்தார்கள்.*

*(அல்முபீன் -1999 மார்ச் பக்கம்: -14)*

இங்கு ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களைப் பற்றி பி.ஜே இவ்வாறு கூறுவதன் மூலம் முதலில் தன் கருத்துக்கே முரண்படுகிறார். பின்வரக்கூடிய ஹதீஸை கவனியுங்கள்.

உர்வா இப்னு ஸுபைர் (ரலி) கூறுகின்றார்கள்:

அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி)

இடத்தில் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு முஷ்ரிக்குகள் இழைத்த மிகக் கொடிய தீங்கைப் பற்றி கேட்டேன். அதற்கவர் ‘‘ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்த போது உக்பா இப்னு அபீ முஈத் வந்து, தனது போர்வையை (ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின்) கழுத்திலே போட்டு கடுமையாக இறுக்கினான். அப்போது அபூபக்கர் (ரலி) வந்து அவனைத் தள்ளிவிட்ட பின் அல்லாஹ் என்னுடைய ரப் ஆவான் எனக் கூறிய ஒருவரைக் கொலை செய்கின்றீர்களா? அவரோ உங்களிடத்தில் உங்களது ரப்பிடமிருந்து

தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்திருக்கின்றார்'' எனக் கேட்டார்கள்.

(ஸஹீஹுல் புகாரி – கி.ப அஸ்ஹாபின்னபி)

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் தன்னையே பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்பதை இந்த ஹதீஸ் தெளிவாக நிரூபிக்கினறது. பி.ஜே உடைய வாதப்படி ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அதிகாரம் படைத்த ஆட்சித் தலைவராகவே இருந்தார்கள் என்பது உண்மையாக இருந்தால் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு தன்னையே பாதுகாக்க முடியாமல் போனதேன் ? ஏனெனில் தன்னையே பாதுகாக்க முடியாதவர் அமீரே அல்ல என அதே பி.ஜே தான் இவ்வாறு கூறுகிறார்:

*ஒரு இமாம் அல்லது அமீர் என்பவர் போர் பிரகடனம் செய்யும் அதிகாரத்தையும், போருக்கென்று படையை அனுப்பும் அதிகாரத்தையும் பெற்றவராக இருக்க வேண்டும். இன்னும் படையை நடத்திச் சென்று போரிடும் சக்தியையும் பெற்றிருக்க வேண்டும்.*

*(அல்முபீன் -1999 மார்ச் பக்கம்: -31)*

நபியவர்களுடைய ஆரம்ப கால வாழ்க்கையாகிய மக்கா வாழ்வின் போது ஆட்சியை பெறுவது ஒரு பக்கம் இருக்க அல்லாஹ்வின் வீடாகிய க.்.பத்துல்லாஹ்வில் தொழக்கூடிய சக்தி கூட இல்லாத நிலையில் வாழ்ந்துள்ளார்கள் என்பதை முன்னால் கொடுக்கப்பட்டுள்ள ஹதீஸ் மிகத் தெளிவாக நிரூபிக்கின்றது.

உண்மை இப்படி இருக்க ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஆட்சித் தலைவராகவே இருந்தனர் என்பது சந்தேகமற்ற இருட்டிப்பல்லவா...? அல்லது அல்லாஹ்வின் தூதர் எனும் வார்த்தையில் ஆட்சித்தலைவர் எனும் பொருள் இருக்கின்றது. எனக்கூறிய பி.ஜே ரஸூலுல்லாஹி (ஸல்)

அவர்கள் மக்காவில் வாழ்ந்த பதின்மூன்று ஆண்டுகால நபித்துவ வாழ்க்கையில் அவர்கள் அல்ல என்று தனது சுயகருத்தை பாதுகாக்க மற்றொரு வார்த்தை ஆரம்பிக்க போகின்றாரா ?

இதே ரீதியில் தான் பொதுவாக ஹதீஸிலே இமாம் (வழிநடத்தக் கூடியவர்) எனும் கருத்தில் வரும் சொற்கள் அனைத்தையும் பி.ஜே தனது வழிகேட்டை நிரூபிப்பதற்காக ஆட்சி நடத்தும் அதிபதி என்று பொருள் கொடுத்துள்ளார். அப்படி அவர் வலிந்து பொருள் கொடுத்துள்ளார். அப்படி அவர் வலிந்து பொருள் கொடுத்துள்ள ஒரு ஹதீஸை உதாரணத்திற்காக இங்கு தருகின்றோம்.

ரஸூலுல்லாஹி (ஸல்) கூறினார்கள்:

மூன்று நபர்களுடன் அல்லாஹ் மறுமை நாளையில் கதைக்க மாட்டான், அவர்களை தூய்மைப்படுத்த மாட்டான், மேலும் அவர்களுக்கு நோவினை தரக்கூடிய தண்டனையும் இருக்கின்றது. பாதை ஓரத்தில் மேலதிக நீரை வைத்திருந்தும் வழிப்போக்கருக்கு கொடுக்காதவர், ஒரு இமாமிடம் பைஅத் செய்தவர்: (எனினும் அவர்) தனது உலக இலாபத்திற்காகவேயன்றி அவருக்கு பைஅத்துச் செய்யவில்லை. அவர் நாடக்கூடியதை அவருக்கு கொடுத்தால் அதனை (பைஅத்தை) நிறைவேற்றுவார். இல்லாவிட்டால் அதனை நிறைவேற்றமாட்டார். அஸரிற்கு பின்னர் மற்றொரு மனிதரிடம் வியாபாரம் செய்பவர். (அவர்) அப்போது அல்லாஹ் மீது சத்தியம் செய்து இன்னின்ன விலை கொடுத்து வாங்கினேன். ஏன்பதாகக் கூறுகின்றார். (மற்றவர்) அவரை உண்மை எனக் கூறி அதை வாங்குகின்றார். அப்பொருளிற்கோ (சத்தியம் செய்து கூறப்பட்ட) விலை கொடுக்கப்படவில்லை

(ஸஹீஹுல் புகாரி – கி.அஹ்காம்)

இந்த ஹதீஸில் வரக்கூடிய இமாம் எனும் வார்த்தைக்கு ஆட்சி நடத்தும் அதிபதி எனும் பொருள் எந்த அகராதியில் உள்ளது? அல்லது எந்த அல்குர்ஆனிய வசனம், எந்த ஹதீஸ் இங்கு இமாம் எனும்

சொல்லின் பொருள் ஆட்சி நடத்தும் அதிபதி என்பதைக் குறிப்பிடுகின்றது? தமக்கு தேவையான கருத்தை புகுத்தி மொழி பெயர்ப்பதால் அது உண்மையாகிவிடுமா?

தலைவர் என்ற பொருள் கொண்ட இமாம் எனும் சொல்லிற்கு ஆட்சி நடத்தும் அதிபதி எனும் மொழி பெயர்த்துவிட்டு பி.ஜே எழுதுவது.

*இமாம் என்பது தொழுகை நடத்தக் கூடியவரைக் குறிக்கும் என்பதை நாம் அறிவோம். முழுமையான அதிகாரம் பெற்ற மன்னரையும் இவ்வார்த்தைக் குறிக்கும்.*

*நபி (ஸல்) அவர்கள் இமாம் என்ற வார்த்தையை இவ்விரு அர்த்தங்களிலும் பயன்படுத்தியுள்ளனர். உதாரணமாக புகாரியில் 41 இடங்களில் இமாம் என்ற வார்த்தை பயன்படுத்துள்ளது. இவற்றுள் 26 இடங்கள் தொழுகை நடத்தக் கூடியவர் என்ற பொருளிலும் 15 இடங்கள் ஆட்சி நடத்தும் அதிபதி என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டள்ளன.*

*(அல் முபீன் 1999 மார்ச் பக்கம் - 13)*

ஆட்சி நடத்தும் அதிபதி எனும் பெருளுடன் 15 இடங்களில் வருவதாக பி.ஜே குறிப்பிடுகின்றவற்றுள் முன்னால் தரப்படுகின்ற ஹதீஸும் ஒன்றாகும். அதில் இவர் குறிப்பிடுகின்ற பொருள் பி.ஜே வலிந்து கொடுத்த பொருளே அன்றி மொழி ரீதியாகவோ, அல்லாஹ்வுடைய வேதத்தைக் கொண்டே நிரூபிக்கப்பட்டதல்ல.

மேலும் ஆட்சி அதிகாரம் எற்பட்ட பிறகுதான் ஒரு அமீருக்குக் கட்டுப்படுவோம் எனும் வாதம் பகுத்தறிவுகூட பொருத்தமானது அல்ல. இதனை பி.ஜே யும் நன்கறிவார். எனவே தான் அரசியல் தலைவராக வேண்டும் எனும் ஆசை வந்தவுடனேயே தமிழ்நாடு முஸ்லிம் முஸ்லிம்

முன்னேற்ற கழகம் என்றதோர் பிரிவை உருவாக்கி அதற்கென ஒரு தலைமைத்துலத்தை மட்டுமல்லாது, பொதுச் செயளாலர் எனும் பதவியையும் உருவாக்கி, அதிகாரம் கூடிய பொதுச் செயளாலர் பதவியிலும் தானே அமர்ந்து விட்டார். பி.ஜே யின் சுயரூபத்தை அறியாமல் ஏமாந்து நிற்கும் அவரது தொண்டர்கள் என்றாவது ஒரு நாள் உண்மையரிந்து நீர் அதிகாரகிக்க ஜனாதிபதியாக வந்ததன் பிறகு உம்மோடிணைந்து உமக்கு கட்டுப்படுகின்றோம் எனக்கூறிவிட்டால் பி.ஜே யின் நிலைமை என்னவாகும்.....?

பகுத்தறிவுகூட மனித சமூகத்தில் ஒரு இலட்சியத்திற்காகப் பாடுபட நினைக்கும் போது முதலாவது நடவடிக்கையாக ஒரு பெயரையும், அக்கொள்கையை ஏற்கக்கூடியோரை வழிநடாத்தக் கூடிய தலைமைத்துவத்தையும் ஏற்படத்துதல் அவசியம் எனக் கருதுவதால் தான் இப்படியான முயற்சிகளில் ஈடுபடக் கூடிய பி.ஜே உட்பட ஒவ்வொருவரும் தாம் விரும்பும் பெயரில் ஒரு அமைப்பை உண்டுபண்ணி அதற்கான தலைமைத்துவத்தையும் ஏற்படுத்தகின்றனர். இப்படியான ஒரு முயற்சியை ஆரம்பிக்கும் போது அவ்வமைப்பின் தலைவர் ஆட்சியதிகாரமிக்க ஒருவராக இரக்க வேண்டும் எனும் கரத்தை அல்லாஹ் வழிகேட்டிலேயே விட்டு விட்ட பி.ஜே கூட அங்கு கூறுவதில்லை. ஆனால் அல்லாஹ்வுடைய தீனில் மாத்திரம் மொழி, அல்லாஹ்வின் வேதம், பகுத்தறிவு போன்ற அனைத்திற்குமே முரணாக ஆட்சியாளர்களுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என பி.ஜே வாதாடுவதைப் பாருங்கள் :

*நம்பிக்கை கொண்டவர்களே ! நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள். இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கட்டுப்படங்கள். உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புபவர்களாக இருந்தால் இதை அல்லாஹ்விடமும் அவன் தூதரிடமம் ஒப்படைத்துவிடங்கள். இதுதான் அல்லாஹ்விடத்தில் உங்களுக்கு மிகவும் அழகான முடிவாக இருக்கும்.*

*(அல்குர்ஆன் 4:59)*

*அமீருக்கு கட்டுப்படுவதை வழியுருத்தும் அல்லாஹ்வின் கட்டளை இது. அமீர்களக்கு கட்டுப்படுங்கள் என்று இறைவன் கூறாமல் எலில் அம்ரி மின்கும் என்று கூறுகின்றான்.*

*உலூ என்றால் உடையவரடனள் என்று பொருள்.*

*அம்ரு என்றால் அதிகாரம் என்று பொருள்.*

*ஆட்சி அதிகாரம் உள்ளவர்களுக்கு கட்டுப்படுவதைத் தான் இவ்வசனம் கூறுகின்றது என்பதில் இரண்டாவது கருத்தே இருக்க முடியாது.*

*(அல் முபீன் 1999 மார்ச் பக்கம் - 25)*

முதலாவதாக பி.ஜே இங்கு அம்ர் என்றால் அதிபாரம் என மாத்திரம் கூறி ஒரு இருட்டடிப்புச் செய்திருக்கினறார். அம்ர் என்றால் என்ன என்பதை விபரமாக விளக்குவதற்கு முன்னால் இங்கு பி.ஜே எதிரும் புதிருமான கருத்துக்களைக் கூறுகின்றார். இந்த வசனம் அமீருக்கு கட்டுப்படுவதை வலியுருத்துவதாகவும் கூறுகின்றார். அதே நேரம் அமீர்களுக்கு கட்டுப்படுங்கள் என்று கூறாமல் உலில் அம்லி (அவரது கருத்துப்படி ஆட்சியதிகாரம் உள்ளவர்கள்) எனக் கூறுவதாகவும் கூறுகின்றார். இவ்விரண்டில் ஒன்றுதான் சரியாக இருக்க முடியும்.

உலில் அம்ர் என்பது அமீரைக் குறிக்குமானால் இவ்வசனம் அமீருக்கு கட்டுப்படுவதை வலியுருத்தும். அது சரியானது எனக் கூறுவாரானால் அமீர் எனக் கூறாமல் உலில் அமர் எனக் கூறப்பட்டிருப்பதை பி.ஜே பிரித்துக் காட்டுவது தவரானதும், பிரயோசனம் அற்றதுமாகும். அல்லது பி.ஜே அழுத்தம் கொடுத்திருப்பது போல் உலில் அம்ர் என்பது அமீர் எனக் கூறுவதிலிருந்து வித்தியாசமாக இருக்குமானால் அமீருக்கு கட்டுப்படுவதை இவ்வசனம் வலியுறுத்துகிறது எனும் அவரது கூற்று தவறாகிவிடும். வழிகேடர்கள் முரண்படுவது என்பது விந்தையானதல்ல.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பூமியில் பாலைவனத்தில் இருக்கக் கூடிய மூவருக்கு (கூட) அவர்களில் ஒருவரை அமீராக நியமிக்காதிருத்தல் ஆகுமானதல்ல.

(அஹ்மத் - ஸஹீஹ்)

மேலும் இந்த (4:59) அல்குர்ஆனிய வசனத்தின் மொழி பெயர்ப்பில் இஸ்லாத்திற்கு முரணான ஒரு நிபந்தனையை அடைப்புக் குறியிட்டுச் சேர்த்துள்ளார். அதாவது (நேர்மையாக) அதிகாரம வகிப்பவர்களுக்கும் கட்டுப்படுங்கள் என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இங்கு அமீருக்கு கட்டுப்படுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனையான நேர்மையாக அதிகாரம் வகிக்க வேண்டும் என்பது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் கட்டளைக்கு நேர் முரணானது என்பதை பின்வரக் கூடிய ஹதீஸைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

சல்மதிப்னு யசீத் (ரலி) ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடம் , அல்லாஹ்வின் தூதரே! எமக்கு எதிராக அமீர்கள் தோன்றி, அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளை எம்மிடம் கேட்டுவிட்டு, எமக்கு செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்தாது தடத்துக் கொண்டால் தாங்கள் எமக்கு கட்டளையிடுவது என்ன? எனக் கேட்டார்கள். (ரஸூலுல்லாஹி (ஸல்)) அவரை விட்டும் திரும்பிக் கொண்டார்கள். பின்னரும் கேட்டார்கள். இரண்டாவது அல்லது மூன்றாவது முறை ரஸூலுல்லாஹி (ஸல்) செவிமடுத்துக் கட்டுப்படுங்கள். அவர்கள் மீத சுமத்தப்பட்டது அவர்கள் மீதேயாகும். உங்கள் மீது சுமத்தப்பட்டது உங்கள் மீதேயாகும் எனக் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

# அமீர் என்பதன் பொருள்

அமீர் எனும் அறபுச் சொல்லிற்கு அகராதியில் காணப்படக் கூடிய பொருளை முதலில் பார்ப்போம்.

அமீர் :

01. தலைமைத்துவப் பரம்பரையை சேர்ந்தவாக இல்லாவிட்டாலும் ஒரு கூட்டத்தின் சிர்வாகப் பொருப்பை ஏற்றவர்.
02. நிர்வாகப் பொறுப்பு இல்லாவிட்டாலும் தலைமைத்தவப் பரம்பரையை சேர்ந்தோருக்கும் பயன்படுத்தப்படும்.

(முன்ஜித் - அறபு அகராதி)

எனவே ஆட்சியதிகாரம் கொண்டவரைத்தான் அமீர் எனப்பட முடியும் எனும் வாதம் அறபு மொழிக்கு நேர் முரணாணது என்பது இங்கு தெளிவாகின்றது.

ஹதீஸை எடுத்துப் பார்த்தால் அதுவும் பிரயானம் ஆரம்பிக்கும் போதிலிருந்து முடியும் வரைக்கும் தலைவராக நியமிக்கப்படுகின்றவரைக் கூட அமீர் என்றே கூறுகின்றது.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மூன்று நபர்கள் பிரயானத்திலிருந்தாலும் (அவர்கள்) தங்களில் ஒருவரை அமீராக்கிக் கொள்ளட்டும்.

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), பஸ்ஸார்-ஸஹீஹ்)

பிரயாணத்திலிருக்கக் கூடிய அமீருக்கு எவ்வித ஆட்சியதிகாரமோ, படைப்பட்டாங்களோ இருப்பதில்லை. இருந்தும் கூட ரஸூலுல்லாஹி (ஸல்) அத்தகைய தலைவரை அமீர் என்றே குறிப்பிட்டுளார்கள்.

எனவே அகராதியின் படியும், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் வழிகாட்டளின் படியும் ஆட்சியதிகாரம் உள்ள, இல்லாத எல்லா தலைவர்களையும் அமீர் எனக் கூறலாம் என்பது நிரூபனமாகன்றது.

அல்லாஹ்வுடைய வேதமாகிய குர்ஆனையும் ஹதீஸையும் எடுத்துப் பார்த்தால் ஆட்சியதிகாரம் உடையவரைத்தான் அமீர் எனச் சொல்லப்படும் என்பதற்கு ஒரு ஆதாரமாவது கிடையாது. இமாம் எனும் சொல் ஆட்சியதிகாரம் அற்றவரக்கு கூறப்பட முடியாது என்றதொரு வாதத்தை முன்வைத்து அதற்கான ஆதாரங்களாக குறிப்பட்ட ஒரு காலத்தில் இமாமுக்கு காணப்பட்ட அதிகாரங்களைக் காட்டடும் ஹதீஸ்களை பி.ஜே முன்வைத்தார். அதே போன்று அமீர் என்பவருக்கு ஆட்சி அதிகாரம் இருக்க வேண்டும் என்ற தனது மனோ இச்சைப் படியான நிபந்தனைக்கு ஆதாரம் காட்ட முடியாமல் குறிப்பிட்டதொரு காலத்தில் அமீருக்கு காணப்பட்ட அதிகாரங்களை பற்றிய ஹதீஸ்களையே முன்வைக்கிறார். ஆட்சியதிகாரம் இல்லாதவரை அமீர் எனக் கூற முடியாது என்ற பிஜே யின் சுய தீர்ப்பிற்கு அவர் ஆதாரம் முன்வைக்க வேண்டும். ஹதீஸ்களை முன் வைத்துள்ளதாக பாமர மக்களை ஏமாற்றவதற்காக சர்ச்சைக்கு அப்பாற்பட்ட ஆதாரங்களை முன்வைத்துவிட்டு பி.ஜே இப்படி எழுதுகிறார் :

*இஸ்லாமிய ஆட்சி முறையில் ஒரேயொரு தலைவர் இருப்பார் அவர் கலீபா அல்லது அமீருல் மு.'.மினீன் எனக் கூறப்படுவார். அவர் பல பனிகளுக்கும் பகுதிகளுக்கும். அதிகாரிகளை நியமிப்பார் அவர்களே*

*அமீர்கள் எனப்பட்டனர் என்பதை நாம் மேலே எடுத்துக் காட்டிய சான்றுகளிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்.*

*ஒருவர் அமீராக இருக்க வேண்டுமானால் அவருக்கு மேலெ ஒரு இமாம் அல்லது கலிபா அல்லது சுல்தான் அல்லது அமீருல் மு.மினீன் இருந்தாக வேண்டும். அவர்களால் அவர் நியமிக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.*

*மேலே நாம் எடுத்துக் காட்டிய சான்றுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வாசகம் கூட இதை விளக்குகின்றது. அமீராக ஆக்கினார்கள். அமீராக நியமித்தார்கள் என்பது போன்ற வார்த்தைகள் தான் இங்கே பயன்படுத்தப்பட்டுளளதே தவிர அவர்களாக அமீராக ஆனார்கள் என்று கூறப்படவில்லை. அல்லது மக்களால் அமீர்களாக ஆக்கப்பட்டார்கள் என்றும் கூறப்படவில்லை.*

*(அல் முபீன் 1999 மார்ச் பக்கம் - 22)*

இதிலே இஸ்லாத்திற்கு முரணான பல அம்சங்கள் காணப்படுகின்றன. அ‌ைவ ஒவ்வொன்றாக ஆதாரங்களுடன் விபரிக்கின்றோம்.

01. முஸ்லிம்களின் ஒரே தலைவர் ஹலீபா அல்லது அமீருல் மு.ஃ.மினீன் எனக் கூறப்படுவார் என்பது தவறாகும். முஸ்லிம்களின் ஒரே தலைவரை அமீர் எனவும் கூற முடியும். அவருக்கு ஆட்சியதிகாரம் இருந்தால். அவரை ஹலீபா எனக் கூறப்படும்.

முஸ்லிம்களின் ஒரே தலைவரை அமீர் எனவும் குறிப்படலாம் என்பதற்கு இதற்கு அடுத்து வரக்கூடிய சிறு தலைப்பாகிய சவாலும் பதிலும் எனும் தலைப்பின் கீழ் ஆதாரங்கள் தரப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் ஒரே தலைவரை அவருக்கு ஆட்சியதிகாரம் இல்லாவிட்டாலும் கூட அவரைஇமாம் எனவும் குறிப்பிடலாம் என்பதற்கான பல ஆதாரங்களில் பின்வரும் ஹதீஸும் ஒன்றாகும்.

“பிரிவுகள் காணப்படக்கூடிய காலத்தில் நான் வாழ நேரட்டால் எனக்க நீங்கள் கட்டளையிட கூடியதென்ன?” என ஹுதைபா (ரலி) அவர்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை நேக்கிக் கேட்டபோது, “ஜமாஅதுல் முஸ்லிமீனையும் அதனது தலைமைத்துவத்தையும் பற்றிப் பிடிப்பீராக!” எனக் கூறினார்கள். அதற்கு ஹுதைபா (ரலி) “அவர்களுக்கென ஒரு ஜமாஅத்தும், ஒரு தலைமைத்துவமும் இல்லை என்றால்..?” எனக் கேட்ட போது “அவ்வனைத்து பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி விடுவீராக! உமக்கு மரணம் வரும்வரையில் ஏதேனும் ஒரு மரத்தின் வேரைத்தான் கடித்திருக்க வேண்டிய (தனித்த) நிலை ஏற்படினும் சரியே!” எனக் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

இந்த ஹதீஸும் இமாம் எனக் கூறப்பட்டுள்ள முஸ்லிம்களின் தலைவர் ஆட்சியதிகாரத்துடன் இரப்பார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எனவே ஆட்சியதிகாரம் உள்ளவர், இல்லாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் முஸ்லிம்களின் ஒரே தலைவரை இமாம் எனக் கூறலாம் என்பது நிரூபனமாகின்றது. இதற்கு மாற்றமாக ஆட்சியதிகாரம் இல்லாதவரை இமாம் எனக் கூற முடியாது. என எவரும் வாதித்தால் அவர் அதற்கான ஆதாரத்தை முன்வைக்க வேண்டும்.

முஸ்லிம்களின் ஒரே தலைவரை ஹலீபா என அழைக்கப்படுவதற்கு இஸ்லாமிய பரிபாஷையில் அவருக்கு ஆட்சியதிகாரம் இருக்க வேண்டும். அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு கூறுகின்றான் :

(மனிதர்களே) உங்களில் எவரேனும் விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்தால், அவர்களுக்கு முன் சென்றவர்களை (பூமிக்கு) அதிபதிகள்க்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும்,அவன் விரும்பிய மார்க்கத்தில் இலர்களை ஸ்திரப்படுத்தி இவர்களுடைய பயத்தை அமைதியும், பாதுகாப்புமாக மாற்றிவிடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். (24:55)

தாவூதே! நிச்சயமாக நாம் உம்மை பூமியில் ஹலீபாவாக அக்கினோம். எனவே நீர் மனிதர்களுக்கிடையில் நியாயமாத் தீர்ப்புக் கூறும். மனோ இச்சையை பினபற்றாதீர். (அது) உம்மை அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழிகெடுத்துவிடும்.

(38:26)

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் மதலாவது அல்குர்ஆனிய வசனத்தில் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களையும் அன்னாரது தோழர்களையும் பார்த்து, ''ஸயஸ்தஹ்லிபன்னகும்'' எனக்கூறி பின்னால் அவர்களை ஹலீபாக்கலாக மாற்றுவதாக அல்லாஹ் கூறுகின்றான். இதிலிருந்து அச்சந்தர்ப்பத்தில் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களும், அன்னாரது தோழர்களும் ஹலீபாக்கலாக இருக்கவில்லை என்பது நிரூபனமாகின்றது.அதே போல இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது அல்குர்ஆனிய வசனத்தில் தாவூது அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தை அல்லாஹ் வழங்கியதைக் குறிப்பிடும் போது ஹலீபா ஆக்கினோம் என அல்லாஹ் கூறுகின்றான். இதன் மூலம்இஸ்லாமிய பரிபாஷையில் ஆட்சியதிகாரம் உடைய முஸ்லிம்களின் ஒரே தலைவரை ஹலீபா எனக் குறிப்பிடப்படும் என்பது தெளிவாகன்றது. ஆனால் அவரை ஹலீபா என மாத்திரம் தான் குறிப்பிடப்பட வேண்டும் என்பது இதன் பொருளல்ல.

02. முஸ்லிம்களின் ஒரே தலைவரினால் பல பணிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் அமீர் எனப்படுவர் என்பதும் பி.ஜேயின் மற்றுமொறு தவறாகும். இஸ்லாமிய பரிபாஷையில் மக்களை எல்லா விடயங்களிலும் கட்டுப்படுத்தி, வழிநடாத்தக் கூடியவர் அமீராவார். ஸகாத், வரி என்பவற்றைச் சேர்ப்பதற்காக நியமிக்கப்படும் பணியாளர்களை அமீர் எனக் கூறுவதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. எனவே தான் ஹதீஸ்களைத் திரிவு படுத்தி பி.ஜே தனது சுய கருத்தை தீனிலே புகுத்த முயற்சி செய்தள்ளார். இது பற்றி தனி தலைப்பில் நாம் எழுதியுள்ளோம்.

03. ஒருவர் அமீராக இருக்க வேண்டுமானால் அவருக்கு மேலே ஒரு இமாம் அல்லது கலிபா அல்லது சுல்தான் அல்லது அமீருல் மு.மினீன் இருந்தாக வேண்டும் எனும் பி.ஜே யின் நிபந்தனையும் தவறானது. முஸ்லிம்களின் ஒரே தலைவரை அமீர் எனக் குறிப்பிடலாம் என்பதற்கு சவாலும் பதிலும் எனும் சிறு தலைப்பில் ஆதாரம் காணப்படுகிறது. பி.ஜே தனது இந்த நிபந்தனைக்கு அமீராக ஆக்கினார்கள், அமீராக நியமித்தார்கள் என்பன போன்ற வார்த்தைகள் தான் இங்கே பயன்படத்தப்பட்டுள்ளனவே தவிர, அவர்களாகவே அமீர்களாக ஆகினார்கள் எனக் கூறப்படவில்லை எனக்கூறி ஆதாரம் காட்டுகிறார். தானாக அமீராக ஆகுவது பற்றி ஹதீஸ்கள் தெளிவாக கூறிக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு பின்வரக்கூடிய ஹதீஸைக் குறிப்பிடலாம்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அபூதரே! நிச்சயமாக நான் உம்மை பலவீனமானவனாகக் காண்கிறேன். மேலும் நிச்சயமாக எதனை எனக்கு விரும்புகின்றேனோ அதனையே உமக்கும் விரும்புகின்றேன். இருவருக்கு கூட நீராகவே ஒரு போதும் அமீராகாதீர், அனாதைகளின் சொத்துக்களையும் ஒருபோதும் பொறுப்பேற்காதீர்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

இந்த ஹதீஸில் தானாக அமீராக ஆகுவது பற்றி குறிப்பிடப்ட்டிருப்பது மட்டுமல்லாமல், இருவருக்கு அமீராக ஆகுவது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மூன்று பேர் கொண்ட ஒரு ஆட்சி உலகம் இதுவரை காணாத ஒன்று. ஆட்சியதிகாரம் இல்லாதவர் அமீராகலாம் என்பதற்கு இந்த ஹதீஸ் தெளிவான சான்றாகும். இப்படியான பல ஹதீஸ்கள் இருக்கும் போது, அதுவும் ஹதீஸ் நூல்களில் மிக முக்கியமான நூலாகிய ஸஹீஹ் முஸ்லிமில் காணப்படும் போது, அப்படி ஹதீஸ்களில் கிடையாது எனக்கூறுவது எவ்வளவு பெரிய அபத்தம் என்பதை வாசகர்கள் இலகுவாக புரிந்துக் கொள்ளலாம்.

எனவே முஸ்லிம்களின் ஒரே தலைவர் அமீர், இமாம் என அழைக்கப்படுவதடன் ஹதீஸில் வந்திருக்கக் கூடிய அல்லது ஹுலபாவுர் ராஷிதீன்களின் காரத்தில் பயன்படுத்தப்பட்ட பெயர்களையும் பயன்படுத்தலாம். ஆட்சியதிகாரம் உள்ளவர்தான் அமீர், அல்லது இமாம் எனும் பி.ஜே யின் கற்பனை, அவர் இருக்கும் வழிகேட்டை நிரூபித்து, அவரையும் முஸ்லிம் எனக் காட்டுவதற்கு மார்க்கத்தில் அவர் செய்யும் குளறுபடியே அன்றி, அதில் எவ்வித உண்மையும் இல்லை.

# சவாலும் பதிலும்

பி.ஜே தனது ஆய்வில் விடுக்கின்றதோர் சவால் பின்வருமாறு :

*எனவே நாம் ஒருவரை அமீர் என்று கூறுவதானால் அவரை அமீராக நியமித்த இமாம் ஒருவர் இருந்தாக வேண்டும். அல்லது அவருக்கு*

*மேலே ஒரு இமாம் இல்லாவிட்டாலும் அவரை அமீர் எனக் கூறுவதற்கு ஒரேயொரு ஆதாரத்தையாவது அவர்கள் எடுத்துக் காட்ட வேண்டும். ஆனால் அப்படி ஒரு ஆதாரமும் நாம் தேடிய வரையில் இல்லை.*

*(அல் முபீன் 1999 மார்ச் பக்கம் - 22)*

ஒருவரை அவருக்கு மேலே இமாம் இல்லாவிட்டாலும் அமீர் எனக் கூறுவதற்கு ஒரேயொறு ஆதாரமாவது கேட்டிருக்கும் பி.ஜே எவரேனும் ஒரு ஆதாரத்தைக் காட்டிவிட்டால் தானும் வழிகெட்டு, பிறரையும் வழிகெடுப்பதை விட்டு விட்டு சத்தியத்தை ஏற்றுக்கொள்வாரா? பி.ஜே நேர்வழிப் பெறுகிறாரோ இல்லையோ சத்தியத்தைத் தெளிவாக எத்திவைப்பது முஸ்லிம்களின் கடமை என்பதால் பி.ஜே கேட்டிருக்கும் விடயத்திற்கு பல ஆதாரங்கள் இருந்தாலும் இரண்டேயிரண்டு ஆதாரங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) கூறுவதாவது:

உயைனா இப்னு ஹிஸ்ன் என்பவர் தனது சகோதரனின் மகனாகிய ஹுர்ரிப்னு கைஸ் என்பவரிடம் வந்தார். அவரோ உமர் (ரலி) தம்மிடம் நெருக்கமாக வைத்திருப்போரில் நின்றும் உள்ளவராவார். அல்குர்ஆனை நன்கு மனனமிட்டு, ஓதக்கூடியவர்களே உமர் (ரலி) அயவர்களது சபையில் அமரக்கூடியோராகவும், அவர்களுக்கு ஆலோசனை கூறக்கூடியோராகவும் இருந்தனர். அவர்கள் வயதில் கூடியவர்களாக இருந்தாலும் சரி. உயைனா தனது சகோதரனின் மகனிடத்தில் :- எனது சகோதரனின் மகனே! எனக்காக இந்த அமீரிடத்தில் அனுமதி பெறுமளவிற்கு உனக்கு அவரிடத்தில் மதிப்பிருக்கின்றதா? எனக் கேட்டார். அதற்கவர், அவரிடம் செல்வதற்கு உங்களுக்காக நான் அனுமதிப் பெறுகின்றேன் எனக் கூறினார். இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார்கள்:- உயைனா, அவருக்கு அனுமதிப்பெற்றார். அவர் (உமர் (ரலி) அவர்களிடத்தில்) வந்ததும் :- ஹத்தாபின் மகனே! எமக்கு நீர் (சொத்துக்களில்) பங்கு தருவதில்லை. எமக்கு மத்தியில் நீதமாக தீர்ப்பளிப்பதும் இல்லை எனக் கூறினார். உடனே அலரை தண்டிக்கும் அளவிற்கு உமர் (ரலி) கோபமடைந்தார்கள். அப்போது ஹுர் கூறினார். விசுவாசிகளின் அமீர் அவர்களே! நிச்சயமாக அல்லாஹ் தன் நபிக்கு

“நீர் மன்னிப்பைக் கைக்கொண்டு நன்மையை ஏவி வருவிராக!, மேலும் அறிவீனர்களைப் புறக்கனித்து விடுவீராக! ” (7:199) என்று கூறுகிறான். நிச்சயமாக இவர் அறிவீனர்களில் நின்றும் உள்ளவர். அல்லாஹ் மீது சத்தியமாக உமர் (ரலி) மீது அந்த (குர்ஆனிய வசனம்) ஓதப்பட்டபோது அதனை அவர்கள் மீறவில்லை. அல்லாஹ்வுடைய வேதம் கூறப்படும் போது உடனடியாகக் கட்டுப் படக் கூடியவர்களாக இருந்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி – கி. இஃதிஸாம் பில் கிதாபி வஸுன்னா)

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டதன் பின்னால் (ஹலீபா பற்றி ஆலோசனை செய்வதற்காக) சகீபா பனூசாயிதாவிலே ஸஃதிப்னு உபாதா (ரலி) வின் பால் அன்ஸாரிகள் ஒன்றுகூடினர். அப்போது எங்களில் ஒரு அமீர் , உங்களில் ஒரு அமீர் (ஏற்படுத்துவோம்) எனக் கூறினர். அப்போது அபூபக்கர் (ரலி), உமர் (ரலி), அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆகியோர் அங்கு சென்றனர். உமர் (ரலி) கதைக்க முனைந்த போது அபூபக்கர் (ரலி) அவர்களை அமைதியாக இருக்கச் செய்துவிட்டு இல்லை, எனினும் நாம் அமீர்களாக இருப்போம், நீங்கள் அமைச்சர்களாக இருங்கள். அவர்கள்தான் குடும்பத்தால் சிறந்தவர்கள், கோத்திரத்தால் உயர்ந்தவர்கள். எனவே உமரிப்னுல் ஹத்தாப் (ரலி) அவர்களுக்கு பைஅத்துச் செய்யுங்கள் எனக்கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி – கி.ப.அஸ்ஹாபின்னபி)

ஒரேயொரு ஆதாரம் கேட்டவருக்கு இரண்டு ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எந்த ஹலீபாவுடைய காலத்தில் அமீருல் முஃமினீன் எனும் வார்த்தை அறிமுகமானதாக பி.ஜே கூறுகின்றாரோ, அதே அமீருல் முஃமினீனைக் குறிக்க அமீர் அமீர் எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதை முதலாவது ஆதாரம் தெளிவாக நிரூபிக்கின்றது.

இரண்டாவது ஆதாரம் ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல. ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய உம்மத்தின் முதலாவது ஹலீபாவைத் தேர்வு செய்வதற்காக ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு பிறகு அன்னாரது உம்மத்தில் மிகச் சிறந்தவரான அபூபக்கர் (ரலி), ஈமானாலும் அறிவாலும் நிரம்பி வழியும் உமர் (ரலி), சுவனத்தைக் கொண்டு நன்மாராயங் கூறப்பட்ட அபூஉபைதா (ரலி), ஸஃத் (ரலி), ஏனைய முக்கியமான நபித்தோழர்கள் ஒன்று கூடியிருந்த சந்தர்ப்பம் அது. ஹலீபாவைத் தேர்வு செய்வதற்காகவே ஒன்று கூடியிருந்த, ஹலீபாவைப் பற்றியே ஆலோசனை செய்துக் கொண்டிருந்த அத்தகைய சந்தர்ப்பத்தில் இமாம் எனக் கூறாமல் அங்கிருந்த யாவரும் அமீர் என முஸ்லிம்களின் தலைவரைக் குறிப்பிட்டுக் கூறினார்கள். அது தவறு என்றதான் பி.ஜே பித்தலாட்டம் பண்ணுகிறார். ஒரு வேளை அச்சந்தர்ப்பத்தில் பி.ஜே இருந்திருந்தால் இப்படிக் கூறுவது தவறு என்பதை அங்கு கூடியிருந்த உத்தம நபித்தேழர்களுக்குத் தெளிவு படுத்தியிருப்பார் போலும்...? பி.ஜே அல்லாஹ்வை பயப்பட வேண்டாமா...? இவர் போன்றோர் பற்றித்தான் அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு விபரிக்கின்றான்.

அவர்கள் (தங்கள்) மனோ இச்சையையும், வீண் சந்தேகத்தையும் அன்றி வேறு (எதனையும்) பின்பற்ற வில்லை. (ஆனால்) நிச்சயமாக அவர்களது ரப்பிடமிருந்து நேர்வழி வந்தே இருக்கின்றது. (53 : 23)

ஹுலபாக்களுடைய காலத்தில் முஸ்லிம்களின் ஒரே தலைவரை அமீர் எனக் குறிப்பிட்டதற்கான தெளிவான இரண்டு ஆதாரங்களை மேலே தந்துள்ளோம். அதற்கு மேலாக ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களே அமீர் எனும் சொல்லை முஸ்லிம்களின் ஒரே தலைவருக்கு பயன்படுத்தியுள்ளதை இங்கு உங்களுக்குத் தருகின்றோம். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களது உம்மத்திற்கு ஏற்படக் கூடிய பல விடயங்களை அவர்கள் முன்னறிவிப்புச் செய்துவிட்டு சென்றார்கள். அதில் ஒரு முன்னறிவிப்பாவது :

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

பன்னிரண்டு அமீர்கள் தோன்றுவார்கள். அவர்கள் அனைவரும் குரைங் வம்சத்தினின்றும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

(ஸஹீஹுல் புஹாரி – கி.அஹ்காம்)

இங்கு ரஸூலுல்லாஹி (ஸல்) முஸ்லிம்களின் தலைவரைக் குறிக்க அமீர் எனும் வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்கள். இதன் பிறகும் இதன் பிறகும் முஸ்லிமின் ஒரே தலைவரை அமீர் எனக் குறிப்பிடுவதற்கு ஒரு முஸ்லிமுக்கு வேறு ஆதாரங்கள் அவசியமா?

சுய இலாபத்திற்காக இஸ்லாம கதைக்கக் கூடிய பி.ஜே இந்த ஹதீஸில் முஸ்லிம்களின் ஒரே தலைவரைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என மழுப்ப முயற்சிக்கலாம். எனவே அதே பண்ணிரண்டு அமீர்களை ஹலீபாக்கள் எனும் வார்த்தையைக் கொண்டு அவர்கள் முஸ்லிம்களின் ஒரே தலைவர்தான் என்பதை சந்தேகமில்லாமல் கூறக்கூடிய ஹதீஸையும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நிச்சயமாக இந்த ஆட்சியதிகாரம் பண்ணிரண்டு ஹலீபாக்கள் கடக்கும் வரைக்கும் முடிவுறாது. அவர்கள் அனைவரும் குரைஷ் வம்சத்தினின்றும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

ரஸூலுல்லாஹி (ஸல்) உடைய காலத்தில் அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்றே நபித்தோழர்கள் அழைத்தனர். அதுதான் ஹலீபா, இமாம் , அமீர் போன்ற அனைத்து வார்த்தைகளை விடவும் சிறந்தது எனும் உண்மையை பி.ஜே யும் ஏற்றிருக்கின்றார். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் பிறகு தோன்றிய முஸ்லிம்களின் ஒரே தலைவருக்கு ஆட்சியதிகாரம் இருந்தால்தான் இமாம் எனக் கூறுவோம் என எந்தவொரு நபித்தோழரும் கூறவில்லை. அதற்கு

மாற்றமாக நபித்தோழர்களின் தலைவராகிய அபூபக்கர் (ரலி) இமாம் எனும் சொல்லிற்குக் கொடுத்த விளக்கத்தை இமாம் இமாம் எனும் தலைப்பிற்கு கீழ் மிகத் தெளிவாக தரப்பட்டுள்ளது. அதேபோல் அவர்களில் எவரும் இமாமை அமீர் எனக் கூறமுடியாது என என புதுக் கண்டுபிடிப்பு நடாத்தவும் இல்லை. உண்மை இப்படி இருக்க சத்தியத்தை மறுப்பதற்காக புதுப்புதுக் கண்டுபிடிப்புகளை பி.ஜே வெளியிட்டது மட்டுமல்லாமல், அவை புதுக்கண்டுபிடிப்புகளல்ல என மக்களை ஏமாற்றுவதற்காக பழைய இமாம் ஒருவரின் கூற்றைத் தனக்குத் தேவையான விதத்தில் பின்வருமாறு பயன்படுத்துகிறார் :

*இந்த விளக்கத்தை நாம் புதிதாக கண்டுபிடித்துவிடவில்லை என்பதையும் நாம் இங்கு தெரிந்தாக வேண்டும்.*

*புகாரி இமாம் அவர்கள் இமாமுக்கு கட்டுப்படுதல் என்ற தலைப்பில் ஒரு பாடத்தை புகாரியில் இடம் பெறச் செய்துள்ளனர். ஆனால் அப்பாடத்தில் எடுத்ததுக் காட்டும் ஹதீஸ்கள் அமீருக்கு கட்டுப்படுவதை தான் குறிக்கின்றன. இமாமமுக்கு கட்டுப்படுவதைப் பற்றி எந்த ஹதீஸையும் அப்பாடத்தில் கூறவில்லை.*

*இதற்கு விளக்கம் கூறும் போது ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.*

*அப்பாடத்தில் இமாமுக்கு கட்டுப்படுதல் பற்றி ஒரு ஹதீஸையும கூறாமல் இமாமுக்கு கட்டுப்படுதல். இதற்கு காரணம் அமீர் என்பவர் இமாமால் நியமிக்கப்பட்டவர்தான். எனவே அமீருக்கு கட்டுப்படுவது உண்மையில் இமாமக்க கட்டுப்படுவதுதான். இவ்வாறு ஹாபில் இப்னு ஹஜர் விளக்கமளிக்கிறார்கள்.*

*(அல் முபீன் 1999 மாரச் - பக்கம் : 23)*

இங்கு இமாம் இப்னு ஹஜர் கூறக்கூடிய கருத்தாகிய இமாமே அமீர்களை நியமிப்பார் என்பது தவறு எனக் கூறுவதற்கில்லை. கேள்வி என்னவென்றால். அமீர்களை நியமிக்கக் கூடிய முஸ்லிம்களின் ஒரே இமாமை அமீர் எனக் கூற முடியுமா என்பது தான். அது பற்றி இமாம் இப்னு ஹஜர் இங்கு எதுவுமே கூறாதிருக்கும் போது அவரது கூற்று

பி.ஜே யுடைய கற்பனையை எவ்வாறு உறுதிப்படுத்தும்? இது பிறரது கருத்தை தனது தேவைக்கேற்ப மாற்றியமைப்பதில்லையா ?

மற்றொரு வகையில் பார்க்கும் போது நபித்தோழர்கள் எப்படி அமீர், இமாம் எனும் சொற்களை ஒரே பொருள் கொண்டதாக நம்பி இருந்தார்களோ அதே போல் தான் இமாம் புஹாரியும் நம்பியுள்ளார்கள் என்பதை பி.ஜே குறிப்பிடும் இமாம் புஹாரி இட்டுள்ள தலைப்பு தெளிவாக நிரூபிக்கின்றது. எனவே தான் பாவமில்லாத காரியங்களில் இமாமுக்கு கட்டுப்பட வேண்டும் எனத் தலைப்பு இட்டுவிட்டு, அமீருக்குக் கட்டுப்படுதலைக் குறிக்கக்கூடிய ஹதீஸ்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்போது பி.ஜே யின் கற்பனை வாதம் புதிதா? இல்லையா என்பது நன்றாகவே தெறிவாகி இருக்கும். இத்தகைய மனோ இச்சைக் கூறும் கற்பனைகளை மார்க்கம் எனக் கூறி பி.ஜே யும் அலர் போன்ற தலைவர்களும் மக்களை வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே மக்கள் அதனை நம்பி வழிகெடுவதற்கான வாய்ப்பு அதிகம். இதனால்தான் ரஸூலுல்லாஹி (ஸல்) பின்வருமாறு கூறினார்கள் :

நிச்சயமாக நான் எனது உம்மத்தினர் மீது பயப்படுவதெல்லாம் வழிகெடுக்கக் கூடிய வலைவர்களைப் பற்றியேயாகும்.

(திர்மிதி - ஸஹீஹ், ஸி.அ.ஸஹீஹா: 1582)

# உலுல் அம்ரு என்போர் யார்?

விசுவாசிகளே! நீங்கள் அல்லாங்வுக்கு வழிபட்டு நடவுங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்களில் நின்றுமுள்ள அதிபருக்கும் வழிபட்டு நடவுங்கள்.

(4 : 59)

அம்ர் என்றால் அதிகாரம் என பி.ஜே கூறிவிட்டு அது பற்றி எவ்வித தெளிவையும் வழங்காது விட்டுவிட்டார். அம்ா் எனும் வார்த்தை பற்றிய முழுமையான தெளிவு பொதுமக்களுக்கு கிடைத்த விட்டால் பி.ஜே யின் முயற்சி இங்கு தோல்வியடைந்து விடும். அம்ர் எனும் சொல்லிற்கு இருக்கக் கூடிய பல பொருள்களில் அதிகாரம் என்பதும் ஒன்றாகும். ஆனால் அதிகாரம் என்றவுடன் ஆட்சியதிகாரம் மட்டும் தான் அதிகாரம் எனும் பி.ஜே யின் விளக்கம் தவறானது. அதிகாரம் எனும் போது அதன் அளவு வித்தியாசப்படும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) பின்வருமாறு கூறினார்கள்:

முஸ்லிம்களின் விடயத்ப்பை பொறுப்பேபேற்கும் எந்தவொரு அமீரும் பின்னர் அவர்களுக்காக பாடுபடாமல், விசுவாசமாக நடக்காமலும் இருந்தால் (அவர்) அவர்களுடன் ஒன்றாக சுவனம் நுழைய மாட்டார்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

முஸ்லிம்களின் விடயங்களை மாத்திரம் பொருப்பேற்கக் கூடியவர் பொருப்பேற்பவர் ஒரு போதும் ஆட்சியதிகாரம் கொண்டவரல்ல. ஆனால் முஸ்லிம்களை நிர்வகிக்க் கூடிய அதிகாரம் நிச்சயமாக அந்த அமீருக்கு உண்டு. அவ்வாறு நிர்வகிப்பவரை அமீர் எனவும் கூறப்படும் எனபதற்கு மேலுள்ள ஹதீஸ் நேரடியான ஆதாரமாகும். எனவே அம்ர் எனும் சொல்லுக்கு அதிகாரம் என ஒரு பொருள் உண்டு என்பதை வைத்து ஆட்சி அதிகாரம் மாத்திரமே எனக்கூறுவது பி.ஜே யின் மோசடி என்பது இந்த ஹதீஸின் மூலம் தெளிவாகின்றது.

முஸ்லிம்களின் விடயங்களை பொருப்பேற்று சிர்வாகிக்கக் கூடிய ஒரு தலைவர் முஸ்லிம்களின் ஆட்சி இருந்தாலும் இல்லாலிட்டாலும் காணப்படுவது அவசியம் என்பதையும், முஸ்லிம்களின் விடயங்களை மகத்திரம் நிர்வகிக்கக்கூடிய தலைவரை அமீர் எனக் கூறலாம் என்பதையும் இந்த ஹதீஸ் நிரூபிக்கின்றது. இவற்றை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இவ்விரண்டும் தவறு என்பதே பி.ஜே யினது தலைமைத்துவம் ஓர் ஆய்வு எனும் கட்டுரையின் உயிர் நாடியாகும்.

ஆட்சியதிகாரம் உள்ள அமீர் பற்றியும் ரஸூலுல்லாஹ் (ஸல்) இதே போன்று தெளிவாக கூறியுள்ளார்கள்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) கூறினார்கள் :

அறிந்துக் கொள்ளுங்கள்! நீங்கள் ஒவ்வொருவரும் கண்காணிப்பாளரே. அத்துடன் நீங்கள் ஒவ்வெர்ருவரும் தத்தமது பொறுப்பில் உள்ளவரககள் பற்றி கேட்கப்படக் கூடியோரே மனிதர்கள் மீது (பொறுப்பான) அமீர் கண்காணிப்பாளரே, அவர் தனது பொறுப்பில் உள்ளவர்கள் பற்றி கேட்கப்படுவார்....

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.இமாரா)

இவ்விரு ஹதீஸ்களில் இருந்தும் நிரூபனமாகக் கூடிய உண்மை யாதெனில் அம்ர் எனும் சொல்லிற்கு ஆட்சியதிகாரம் எனப் பொருள் கொள்வது தவறு என்பதேயாகும். அம்ர் எனும் சொல் அதிகாரம் எனும் பொருளைத் தரக்கூடியது என்றாலும், அதிகாரம் எனக் கூறும் பேர்து இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அது முஸ்லிம்களின் மீது மாத்திரம் அதிகாரம் செலுத்தவதாகவும் இருக்கலாம். அல்லது முழு மனிதர்களையும் ஆட்சி செய்வதாகவும் இருககலாம். முஸ்லிம்கள் மீது மாத்திரம், அல்லது அனைத்து மனிதர்கள் மீதும் அதிகாரம் கொண்டவர்களைத் தலைவர்கள் எனும் பொருள் கொண்ட இமாம் அல்லது அமீர் என அழைப்பதிலும் எவ்வித தடையும் இல்லை. இத்தகைய முஸ்லிம்களின் தலைவருக்குக் கட்டுப்படவது முஸ்லிம்கள்

மீது கட்டாயக் கடமையாகும். இத்தகைய தலைவர்களைத்தான் உலுல் அம்ர் எனக் கூறி, அல்லாஹ் முஸ்லிம்களை நோக்கி அத்தகையவர்களுக்கும் கட்டுப்படுமாறு கூறுகின்றான்.

# ஹதீஸ்களை திரிபு படுத்தல்

பி.ஜே சத்தியத்தை ஏற்காது தான் இருக்கக் கூடிய வழிகேட்டை நிரூபிப்பதற்காக ஹதீஸ்களைக் கூட அவரது இந்த ஆய்வில் திரிபு படுத்தியிருக்கின்றார். அவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

01. *நபி (ஸல்) அவர்கள் முஆதையும் அபூ மூஸாவையும் யமனுக்கு (அமீர்களாக) அனுப்பிய போது நீங்கள் இருவரும் நளினமாக நடங்கள். கடுமையாக நடக்காதீர்கள். மக்களிடம் மகிழ்ச்சியை உருவாக்குங்கள். வெறுப்பை உருவாக்கிடாதீர்கள். ஒருவர் இன்னொருவருக்கு இணங்கி நடங்கள். கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். என்று அறிவுரை செய்தார்கள்.*

*(அறிவிப்பவர்: அபூ புர்தா   ஆதாரம் புகாரி)*

*இந்த ஹதீஸில் ஒரே பகுதிக்கு ஒரே சமயத்தில் இரண்டு அமீர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) நியமித்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.*

*(அல்முபீன் 1999 மார்ச் - பக்கம் 20)*

இங்கு பி.ஜே ஒரே பகுதிக்கு ஒரே சமயத்தில் இரண்டு அமீர்களை ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நியதமித்தார்கள் எனக் கூறுகின்றார். இது ஹதீஸிலே செய்யப்பட்டிருக்கும் மிக பயங்கரமான மோசடியாகும். சத்தியத்தை தேடும் ஒவ்வொருவரும் இதன் உண்மையை விளங்கிக்

கொள்ளும் பொருட்டு அச்சம்பவம் பற்றி பி.ஜே குறிப்பிடும் அதே அறிவிப்பாளர் அறிவித்துள்ள தெளிவான அறிவிப்பை உங்கள் முன் வைக்கின்றோம் :

அபூ புர்தா கூறுகின்றார்கள் :

அபூமூஸா (ரலி), முஆத் பின் ஜபல் (ரலி) ஆகியோரை ரஸூலுல்லாஹி (ஸல்) யமனுக்கு அனுப்பினார்கள். கூறுகின்றார்: அவ்விருவரில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மாநிலத்திற்கு அனுப்பினார்கள். கூறுகின்றார்: யமன் இரு மாநிலங்களைக் கொண்டதாகும். பின்னர் (ரஸூலுல்லாஹி (ஸல்)) கூறினார்கள் : இருவரும் (மக்களுக்கு) இலகுபடுத்துங்கள். சிரமத்தை ஏற்படுத்தாதீர்கள். மேலும் நன்மாராயங் கூறுங்கள், (பயம் காட்டி) வெருண்டோடச் செய்து விடாதீர்கள். பின்னர் ஒவ்வொருவரும் தத்தமது கடமையின்பால் சென்றனர். கூறுகின்றார்: அவ்விருவரில் ஒவ்வொருவரும் தனது (அதிகாரத்திற்குட்பட்ட) பூமியில் தனது நண்பருக்கு நெருக்கமாக வந்து விட்டால் அவருடன் உறவைப் புதுப்பித்துக் கொள்வார். அவருக்கு ஸலாம் சொல்வார். பின்னர் (ஒருமுறை) முஆத் (ரலி) தனது நண்பராகிய அபூ மூஸா (ரலி) அவர்களை நெருங்கியதாக தனது பூமியில் வந்த போது அவரிடம் தனது கோவேறு கழுதையில் வந்தார்கள். அப்போது மக்கள் புடைசூழ அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவரிடத்தில் ஒருவர் அவரது இரு கைகளும் கழுத்துடன் பிணைக்கப்பட்டவராகக் காணப்பட்டார். உடனே அவரிடக் அப்துல்லாஹ் இப்னு கைஸே! இவர் ஏன் இப்படி? என முஆத் (ரலி) கேட்டார்கள். அதற்கவர் இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் பிறகு நிராகரித்தவராவார் எனக் கூறினார்கள். (அவர்) கொல்லப்படும் வரை நான் இறங்க மாட்டேன் எனக் கூறினார்கள். அதற்காகத்தான் அவர் கொண்டுவரப் பட்டிருக்கின்றார், நீர் இறக்குவீராக! எனக் கூறினார்கள். கொல்லும் படி ஏவப்பட்டது. உடனடியாக அவர் கொல்லப்பட்டார். பின்னர் (அவர்) மிருகத்தை விட்டும் இறங்கினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி – கி.மகாஸி)

உங்கள் முன்னால் தரப்பட்டிருக்கும் ஹதீஸ் கூறும் உண்மைக்கும் பி.ஜே திரிபு படுத்தி கூறும் செய்திக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? பி.ஜே யை புரிந்துக் கொள்ளாதவர்கள் அவர் பற்றித் தெரிந்துக்

கொள்வதற்கு இது சிறந்தவொரு சான்றாகும். தனது கற்பனையை நிருபிக்க ஹதீஸையே திரிபு படுத்துகின்றார். இது அல்லாஹ்வுடைய அச்சமுள்ளவர்கள் செய்யக்கூடிய செயல்தானா? என்பதை வாசகர்களே முடிவு செய்துக் கொள்ளுங்கள்.

எனவே ஒரே சமயத்தில் ஒரே பகுதிக்கு அதிகாரம் வகிக்கக் கூடியவர்களாக இருவரை ரஸூலுல்லாஹி (ஸல்) நியமித்தார்கள் என எழுதியதில் எவ்வித உண்மையும் இல்லை. இஸ்லாத்தின் அடிப்படைக்கே இது முரணாகும்.

02. *உமர் பின் உபைதுல்லா, ஷைபானி மகளை தல்ஹாவுக்கு நிகாஹ் செய்து வைக்க விரும்பினார். இதில் கலந்து கொள்வதற்காக அபான் பின் உஸ்மானுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். அப்போது அவர் ஹஜ் விவகாரத்துறைக்கு அமீராக இருந்தார்.*

*அறிவிப்பவர்: நபீஹ் பின் வஹப்    ஆதாரம் : முஸ்லிம்*

இந்த அறிவிப்பு ஒரு துறைக்கு அமீராக செயல்பட்டதைக் காட்டுகின்றது. இவையனைத்துமே கலீபாக்கள் காலத்தில் நடைபெற்றவை.

*(அல் முபீன் 1999 மார்ச் பக்கம் - 22)*

இங்கு பி.ஜே முன்வைத்திருக்கும் சம்பவம் அலரது வாதத்தையே உடைத்தெரியக் கூடியதாகவும், இஸ்லாத்தின் விதிகளில் ஒன்றாகிய பிரயானத்திலும் அமீர் நியமிக்கப்பட வேண்டும். என்பதை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் இருப்பதால் இங்கும் பி.ஜே உண்மையை திரிபு படுத்தியுள்ளார். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பிரயாணத்திலும் கூட அமீர் நியமிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டதுடன் நின்று விடாது அதனை செயல்படுத்தியும்

காட்டியுள்ளார்கள். அமீரை நியமிக்காது எந்தவொரு பிரயானக் கூட்டத்தையும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அனுப்பமாட்டார்கள். இதற்கொரு ஒரு உதாரணமாக பின்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம்.

அபூஹுரைரா (ரலி) கூறுகின்றார்கள் :

ஹஜ்ஜதுல் விதாவிற்கு முன்னர் ஹஜ் செய்யச் செல்லும் ஒரு கூட்டத்திற்கு அபூபக்கர் (ரலி) அவர்களை ரஸூலுல்லாஹி (ஸல்) அமீராக நியமித்து அனுப்பிய போது அறுத்துப்பலியிடும் தினத்தில் இந்த வருடத்திற்கு பிறகு இணைவைக்கக் கூடிய எவரும் ஹஜ் செய்யக்கூடாது எனவும் நிர்வாணமாக எவரும் அல்லாஹ்வின் வீட்டை வலம் வரக்கூடாது எனவும் மக்களுக்கு மத்தியில் அறிவிக்கும்படி கூறி அனுப்பினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி – கி. மகாஸி)

பி.ஜே குறிப்பிடும் சம்பவத்தில் ஹஸ் செய்யச் சென்ற பிரயானக் கூட்டத்திற்கு அபான் பின் உஸ்மான் அமீராக இருந்தார் எனும் உண்மையை மறைப்பதற்குத்தான் அவர் அச்சம்பவத்தை திரிபு படுத்தியிருக்கின்றார். அச்சம்பவத்தை விபரமாகத் தருகின்றோம். முதலில் பி.ஜே குறிப்பிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு காணப்படுகிறது.

நபீஹ் பின் வஹப் அறிவிப்பது:

உமர் பின் உபைதுல்லாஹ் என்பவர் தல்ஹா பின் உமருக்கு ஷைபாவுடைய மகளைத் திருமனம் வெய்து வைக்க நாடினார். ஆகவே அதில் கலந்துக் கொள்வதற்காக அபான் பின் உஸ்மானுக்கு அழைப்பு அனுப்பினார். அவர் அப்போது (அமீருல் ஹஜ்) ஹஜ்ஜிற்கு அமீராக இருந்தார்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.நிகாஹ்)

இங்கு (அமீருல் ஹஜ்) ஹஜ்ஜிற்கு அமீராக இருந்தார் என்பதை த் திரிபு படுத்தி தனது சுயகருத்தை இஸ்லாத்தில் புகுத்துவதற்காக ஹஜ்

விவகாரத்துறைக்கு அமீராக இருந்தார் என பி.ஜே கூறுகின்றார். ஹஜ்ஜிற்கு அமீராக இருந்தார் என்பது ஹஜ் விவகாரத்துறைக்கு அமிராக இருந்தார் எனப் பொருள் படுமா? ஒரு போதும் அமீருல் ஹஜ் என்பது அத்தகைய பொருளைக் கொடுக்காது. பி.ஜே அப்படித் தவறுதலாக விளங்கி இருக்கலாம் என எவராவது சந்தேகம் கொண்டால் அத்தகைய நல்லெணணம் கொள்வதற்கு இல்லை. இல்லை ஏனெனில் அதே ஹதீஸ் நூலில் அதே அறிவிப்புடன் சேர்ந்ததாக இதற்கு விளக்கம் தரக்கூடிய அறிவிப்புகள் காணப்படுகின்றன. அந்த அறிவிப்பைப் பாருங்கள் :

நபீஹ் பின் வஹப் அறிவிப்பதாவது :

உமர் பின் உபைதுல்லாஹ் என்பவர் தனது மகனாகிய தல்ஹா பின் உமருக்கு ஷைபாவுடைய மகளை ஹஜ்ஜில் இருக்கும் போது திருமணம் செய்து வைக்க நாடினார். அந்நாளில் அபான் பின் உஸ்மான் (அமீருல் ஹாஜ்) ஹஜ் செய்வோருக்கு அமீராக இருந்தார்.

(ஸஹீஹ் முஸ்லிம் - கி.நிகாஹ்)

இதன் பிறகும் பி.ஜே உண்மையை திரிபு படுத்தவில்லை, தவறு நடந்திருக்கின்றது என நல்லெண்ணம் வைக்க முடியுமா...? எனவே பி.ஜே ஹதீஸ் எனக் கூறினால் இதனை ஆழமாக அறியாமல் நம்ப முடியுமா...? பி.ஜே ஹதீஸ்களைத் திரிபு படுத்தியுள்ளார் என்பதற்கு அவரது இந்த ஆய்வில் காணப்படும் இரண்டாவது சான்று இதுவாகும்.

இவ்வாறு பி.ஜே ஹதீஸ்களையும், உண்மைச் சம்பவங்களையும் திரிபு படுத்த வேண்டிய தேவை ஏன் ஏற்படுகின்றது என்றால் பி.ஜே முன் வைக்கக் கூடிய கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை. இல்லாத ஒன்றை நிருபிப்பதனால் இத்தகைய செயல்கள் இன்றி நேர்மையாக அதனை நிருபிக்க முடியாது என்பது யாவரும் அறிந்ததே.

மேற்படி சம்பவத்தில் அதனை ஆதாரமாக முன்வைத்த பி.ஜே இற்கே எதிரான மூன்று உண்மைகள் இருக்கின்றன. பிரயாணத்தில் கூட

அமீர் நியமிக்கப்பட வேண்டும் என்பது முதலாவது. ரஸூலுல்லாஹி (ஸல்) ஹஜ்ஜிற்கு சென்ற குழுவினருக்கு அபூபக்கர் (ரலி) அவர்களை அமீராக நியமித்தது இரண்டாவது. அபான் பின் உஸ்மான் ஹஜ் செய்வோருக்கு ஹஜ்ஜின் போது அமீராக இருந்தது. மூன்றாவது. இந்த மூன்று விடயங்களும் ஒன்று மற்றொன்றை உறுதிப்படுத்துகின்றன.

# நரகின் பால் அழைக்கக் கூடிய பிரிவுகள் நபி (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்களா?

“பிரிவுகள் காணப்படக்கூடிய காலத்தில் நான் வாழ நேரிட்டால் எனக்கு நீங்கள் கட்டளையிடக் கூடியதென்ன?” என ஹுதைபா (ரலி) ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை நோக்கி கேட்டபோது “ஜமாஅதுல் முஸ்லிமினையும் அதனது தலைமைத்துவத்தையும் பற்றிப் பிடிப்பீராக!” எனக் கூறினார்கள். அதற்கு ஹுதைபா (ரலி) “அவர்களுக்கென ஒரு ஜமாஅத்தும் ஒரு தலைமைத்துவமும் இல்லை என்றால்...?” எனக் கேட்டபோது “அவ்வனைத்து பிரிவுகளையும் விட்டு ஒதுங்குவீராக! உமக்கு மரணம் வரும் வரையில் ஏதேனும் ஒரு மரத்தின் வேரைத்தான் கடித்திருக்க வேண்டிய (தனித்த) நிலை ஏற்படினும் சரியே!” எனக் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

மேற்காணப்படும் ஹதீஸில் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நிலை தற்போது அப்படியே காணப்படுகின்றது. எனவே சுவனம் செல்ல ஒருவர் இன்று விரும்பினால் அவர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது கட்டளைப்படி ஜமாஅதுல் முஸ்லிமீனையும், அவர்களின் இமாமையும் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கூற முடியாது. உண்மை இப்படி இருக்க இந்த ஹதீஸ் பி.ஜே முன்னால் வைக்கப்பட்ட போது இதன் பொருளை மாற்றுவதற்காக பின்வருமாறு முயற்சி செய்கின்றார்:

*நபி (ஸல்) அவர்களின் பரம்பரையில் வந்து, நபியவர்களின் வழிஜயை கடைப்பிடிக்காத ஒருவராலேயே இந்த குழப்பம் ஏறபடும் முன்னறிவிப்பே இந்த ஹதீஸ் உணரலாம்.*

*(அல் ஜன்னத் - ஏப்.1993 பக்கம் : 15 )*

பின்வரக்கூடிய ஹதீஸின் ஆரம்ப பகுதியை மாத்திரம் எடுத்துக் காட்டி பி.ஜே இம்முயற்சியை செய்கிறார். இது ஹதீஸிலே செய்யப்பட்டிருக்கும் மிகத் தெளிவான மோசடியாகும். ஏனெனில் பி.ஜே குறிப்பிட்டிருக்கும் முன்னறிவிப்பிற்கும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் முன்னறிவிப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பல விடயங்களைக் கொண்டு இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். பி.ஜே குறிப்பிட்டுள்ள ஹதீஸ் இதோ :

எனது குடும்பத்தை சேர்ந்த ஒருவரால் குழப்பம் ஏறபடும் அவர் என்னை சேர்ந்தவர் எனக் கூறுவார். (ஆனால் அவரோ) என்னைச் சேர்ந்தவர் அல்ல. நிச்சயமாக அல்லாஹ்வை அஞ்சக் கூடியோரே எனது நேசர்களாவார். பின்னர் யாவரும் விலா எழும்புகள் ஒன்றுபட்டிருப்பது போல் ஒரு மனிதரின் கீழ் ஒன்று படுவார்கள். பின்னர் குருட்டுத் தனம் தோன்றும். இந்த உம்மத்திலுள்ள யாவரையும் அது ஆட்கொண்டு விடும். முடிந்து விட்டது என நினைத்தால் மீண்டும் உருவெடுக்கும். அப்போது காலையிலே மு..மினாக இருக்கக் கூடியவன் மாலையாகும் போது

காபிராகி விடுவான். இறுதியில் மனிதர்கள் இரு கூட்டமாக ஆகிவிடுவார்கள். எவ்வித நயவஞ்சகமும் அற்ற விசுவாசிகள் கூட்டம், விசுவாசமே அற்ற சயவஞ்சர்கள் கூட்டம். அந்நிலை உங்களுக்கு ஏற்பட்டால் அந்த நாளில் அடுத்த நாளில் தஜ்ஜாலை எதிர்ப்பாருங்கள்.

(அபூதாவூத் - கி.பதன் : 3568, ஸஹீஹ்)

இந்த ஹதீஸிலே ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது வழித்தோன்றலில் இருந்து குழப்பத்தை தோற்றுவிக்கக் கூடியவர் தஜ்ஜால் தோன்றுவதற்கு மிக நெருக்கமாகவே தோன்றுவார் எனக் கூறப்பட்டடுள்ளது. நேர்வழி பெற்ற ஹலீபா ஒருவரது (இமாம் மஹ்தியினது) ஆட்சியில் தஜ்ஜால் தோன்றும் போது ஈஸா (அலை) தோன்றி தஜ்ஜாலைக் கொன்று விடுவார்கள். அதன் பிறகு முழு உலகிலும் இஸ்லாமிய ஆட்சி தோன்றும். ஆனால் மேலேயுள்ள ஹதீஸ் பிரிவுகள் காணப்படக்கூடிய எல்லா காலத்திற்கும் உரியதாகும். மேலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது வழித்தோன்றலில் தோன்றக் கூடிய குழப்பவாதி ஒருவரேயாவார் என இந்த ஹதீஸ் கூறுகின்றது. மேலேயுள்ள ஹதீஸ் நரகின் பால் அழைக்கக் கூடிய பல அழைப்பாளர்கள் இருப்பார்கள் எனக் கூறுகின்றது.

மேலும் இன்று இருக்கும் நரகின்பால் அழைக்கும் பிரிவுகள், இயக்கங்கள் எல்லாம் அவர்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது வழித் தோன்றல் எனக் கூறி வழிகெடுப்பதுமில்லை. எனவே பி.ஜே குறிப்பிடும் இறுதி காலத்தில் தோன்றக் கூடிய குழப்ப வாதி பற்றிய ஹதீஸிற்கும், நரகின்பால் அழைக்கக் கூடிய பல பிரிவுகளும் சுவனம் செல்லக்கூடிய ஜமாஅதுல் முஸ்லிமீனும் காணப்படக் கூடிய காலங்களைக் குறிக்கும் ஹதீஸிற்கும் எவ்வித சம்மதமும் இல்லை. எனவே நேர்வழி பெற்று சுவனம் செல்ல நினைக்கும் ஒருவர் இன்றைய காலத்தில் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது கட்டளைப்படி ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைவதைத் தவிர வேறு வழி கிடையாது.

# பி.ஜே யின் கேள்விகளும் அவற்றிற்கான பதில்களும்.

கேள்வி 01 :

*தங்களை அமீரென்று சொல்லக் கூடியவர்கள் முழுமையான ஆட்சியதிகாரம் படைத்த மன்னர் என்ற கருத்தில் அமைந்த கலீபா, இமாம், சுல்தான், மலிக், அமீருல் ஆம்மா என்ற பொருளில் தங்களை அமீர் என்று சொல்லிக் கொள்கின்றார்களா? அல்லது மன்னர்களால் பல பகுதிகளுக்கு பல பணிகளுக்காக நியமிக்கப்பட்ட அமீர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளப் போகின்றார்களா?*

*(அல் முபீன் 1999 மார்ச் - பக்கம் 33)*

பதில் :

கேள்விக்கு பதிலளிக்கும் முன் கேள்வியில் உள்ள தவறை அறிந்துக் கொள்ளுங்கள். அமீர் எனும் சொல் அதிகாரம் படைத்த மன்னர் எனும் பொருளைக் கொண்டது என கேள்வியில் குறிப்பிடப்பட்டிருப்பது மிகப் பெரிய தவறாகும். விபரமாக முன்னால் விளக்கப்பட்டுள்ளது.

சுவனம் செல்லக் கூடிய ஒரே கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீன் முஸ்லிம்களின் ஒரே தலைவரை அமீர் இமாம் எனக் குறிப்பிடுகின்றது.

முஸ்லிம்களின் விடயங்களை பொறுப்பேற்கக் கூடியவரை எவ்வாறு ரஸூலுல்லாஹி (ஸல்) அமீர் எனக் குறிப்பிட்டுள்ளார்களோ அதே போன்று ஜமாஅதுல் முஸ்லிமீனை வழிநடாத்தக் கூடிய தலைவரை அமீர் என முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

எந்த இமாம் இன்றி மரணிப்பதை இஸ்லாத்திற்கு அப்பாற்பட்ட (ஜாஹிலிய்ய) மரணம் என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்களோ அந்தப் பொருளில் சுவனம் செல்லக் கூடிய ஒரே கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீன் தமது தலைவரை இமாம் எனக் கூறுகின்றது.

அமீர் என ஒருவரைக் குறிப்பிடுவதற்கு அவருக்கு மேலே ஒரு இமாம் இருந்தேயாக வேண்டும். என்பது பி.ஜே யின் ஆதாரமற்ற மனோ இச்சைப்படியான வாதம் என்பது முன்னால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மன்னர்கள் சில பணிகளுக்காக அமீர்களை நியமித்தார்கள் என்பது தவறு. பணியாளர் எனும் பொருள் கொண்ட ஆமில்களை நியமித்தார்களேயன்றி, தலைவர் எனும் பொருளுடைய அமீர்களைப் பணிகளுக்காக நியமிக்கவில்லை. எங்கெல்லாம் அமீர் நியமித்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளதோ அங்கு அந்த அமீரின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு மக்கள் கூட்டம் காணப்படும். அப்படி இல்லாமல் ரஸூலுல்லாஹி (ஸல்) எவரையும் அமீர் என ஒருபோதும் குறிப்பிடவில்லை.

கேள்வி 02 :

*அமீருக்கு அமைச்சர்கள் உண்டு எனப் பார்த்தோம். இந்த இயக்கங்களின் அமீர்களுக்கு ராணுவ அமைச்சர் யார்? உள்துறை அமைச்சர் யார் ? என்று கேட்க வேண்டும். அதெல்லாம் இல்லை என்றால் நீங்கள் அமீரும் இல்லை என்று கூறிவிடலாம்.*

*(அல் முபீன் 1999 மார்ச் - பக்கம்: 35)*

பதில் :

அமைச்சர்கள் இருந்தால்தான் ஒருவர் அமீர் எனக் குறிப்பிடலாம் என்பதற்கு என்ன ஆதாரத்தை பி.ஜே முன்வைத்துள்ளார்? அமீருக்குறிய நிபந்தனையாக அவருக்கு அமைச்சர்கள் இருக்க வேண்டும் என அறபு மொழியில் காணப்படுகின்றதா? குர்ஆன், ஹதீஸில் காணப்படுகினறதா? குறைந்தபட்சம் உலக நடைமுறையாவது இதற்கு சான்று பகர்கின்றதா ?

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

மூன்று நபர்கள் பிரயாணத்திலிருந்தாலும் (அவர்கள்) தங்களில் ஒருவரை அமீராக்கிக் கொள்ளட்டும்.

(பஸ்ஸார் - ஸஹீஹ்)

இது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் கூற்றாகும். இது போன்ற இன்னும் சில அறிவிப்புகள் முன்னால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் இல்லாவிட்டால் அவர் அமீரேயல்ல என்பது உண்மையானால் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அது பற்றித் தெரியாமல் இருந்தார்களா..? பி.ஜே தனக்குத் தெரியாதது எதுவும் இல்லை எனும் இறுமாப்பை விட்டு, தவ்பாச் செய்து சத்தியத்தை ஏற்றுக் கொண்டால் முஸ்லிமாக இருப்பார். வரட்டு கௌரவத்திற்காக வழிகேட்டில் அடம்பிடித்தால் மறுமை நாளில் முழு மனிதர்களுக்கு மத்தியிலும் கேவலப்பட வேண்டி ஏற்படும். உண்மை என்னவெனில் அமீர் என்பவருக்கு மொழி ரீதியாகவோ, ஷரீஅத் ரீதியாகவோ அமைச்சர்கள் இருக்க வேண்டும் என ஒரு நிபந்தனையே அல்ல என்பதேயாகும்.

# பி.ஜே யும் சந்தர்ப்ப வாதமும்

ஒரு காலத்தில் ஜாக் பிரிவின் வெளியீடான அல் ஜன்னத் மாத இதழின் ஆசிரியராக இருந்து மத்ஹபைப் பின்பற்றக் கூடியோரையும் கப்றுவணக்கம் செய்யக்கூடியோரையும் முஷ்ரிக்குகள் (இணைவைப்போர்) எனவும், அவர்கள் பின்னால் நின்று தொழக்கூடாது எனவும் பத்வா வழங்கிய பி.ஜே அதே ஜாக் பற்றி எழுதுவதாவது :

*தப்லீக், இமாஅதே இஸ்லாமி, ஜாக், ஜமாஅதுல் முஸ்லிமீன், சிம், அஹ்லே ஹதீஸ், முஜாஹித், ஸல.்.பி போன்ற ஏராளமான அமைப்புகள் தங்கள் தலைமை இஸ்லாமிய தலைமை எனக் கூறுகின்றன. அமீருக்குக் கட்டுப்படுதல் பற்றி ஆதாரங்களை எல்லாம் எடுத்துக் காட்டி தங்களுக்குக் கட்டுப்படுவது மார்கக்கடமை என்கின்றனர். முன்னர் நாம் சுட்டிக் காட்டிய அமைப்புகள் இஸ்லாமிய தலைமை அல்ல எனவும் கூறுகின்றனர்.*

*(அல் முபீன் 1999 மார்ச் - பக்கம்: 53)*

*நாம் கூறுவது என்னவெனறால் தங்களால் இயன்ற அளவுக்கு அவர்கள் செயல்படட்டும். ஆனால் இஸ்லாமியத் தலைமை. இவர்தான் அமீர் எனக்கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம். அமீருக்குக் கட்டுப்படுதல் என்பது தம்மை போன்றவர்களுக்குக் கட்டுப்படுவதுதான் எனவும் வாதிட வேணடாம்.*

*(அல் முபீன் 1999 மார்ச் - பக்கம் : 53)*

மக்கள் சிந்திக்க வேண்டியது ஜாக் எனும் பிரிவில் முன்நின்று ஏறக்குறைய ஒரு தசாப்தமாக மக்களை ஏமாற்றிக் கொண்டுதான் பி.ஜே இருந்தாரா? அரசியல் தலைமைத்துவ ஆசையில் பி.ஜே தற்போது ஏற்படுத்தியிருக்கும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் எனும் பிரிவை இவ்வாறு புகழ்கின்றார் :

*முஸ்லிம் லீக், தேசிய லீக், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், ஜனநாயகக்கட்சி, முஸ்லிம் மஜ்லிஸ் போன்ற அமைப்புகள் தங்கள் தலைமையை இஸ்லாமியத் தலைமை என்று கூறுவதில்லை. இந்த நாட்டில் எந்த அளவுக்கு சக்தி இரக்கின்றதோ அந்த அளவுக்கு நாம் செய்து கொண்ட ஏற்பாடு என்று பகிரங்கமாகக் கூறுகின்றனர். அந்த வகையில் இவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.*

*(அல் முபீன் 1999 மார்ச் - பக்கம் : 52)*

இப்போது பி.ஜே உருவாக்கியிருக்கும் கட்சிதான் தா.மு.மு.க (தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம்). ஜாக் எனும் பிரிவு மக்களை ஏமாற்றுவதாக கூறுகிறார். அதே ஜாக் பற்றி 1993 ஆம் ஆண்டு என்ன கூறியுள்ளார் என்பதையும் பாருங்கள் :

*நாம் ஒரு கூட்டமைப்பாக அமீரை ஏற்படுத்தி குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் இயங்கி வருகின்றோம். இது முஸ்லிம்களின் கூட்டமைப்பு அல்ல என கூறப் போகின்றீர்களா?*

*(அல்ஜன்னத் - ஏப்ரல் - 93)*

ஜாக் எனும் பிரிவுப் பெயருக்கு மாற்றமாக ஹதீஸில் காணப்படும் ஜமாஅதுல் முஸ்லிமீன் எனும் பெயரே வபயன்படுத்தப்பட வேண்டும் எனும் ரீதியில் கேட்ட கேள்விக்குத்தான் பி.ஜே மேற்கண்டவாறு பதில் கூறியுள்ளார். பின்னர் அதற்கு ஒருதலைமையை உருவாக்குவது பற்றிய ஹதீஸை மேற்கோள் காட்டி எச்சரித்துமுள்ளார்.

1993 குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் அமீரை ஏற்படுத்தி கூட்டமைப்பாக இயங்கியதாக கூறிய பி.ஜே இன்று அந்த ஜாக்கை ஏமாற்று எனக் கூறக் காரணம் ஜமாஅதுல் முஸ்லிமீன் குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் முன்வைக்கும் ஆதாரங்களுக்கு ஈடுகொடுக்க முடியாததனாலா ? அன்று தங்கள் தலைவரை அமீர் எனக் கூறிக்

கொண்டது அறபு மொழிக்கு மாற்றமான இன்றைய புது ஞானம்( ? ) இல்லாதிருந்ததனாலா.......?

உண்மை என்னவெனில் மத்ஹபுவாதிகளை வழிகேடு என நிரூபித்தது போன்று உண்மையிலேயே குர்ஆனையும் ஹதீஸையும் சொல் மூலமும், செயல் மூலமும் முன்வைக்கக் கூடிய முஸ்லிம்களையும் மட்டம் தட்டிவிடலாம் என பி.ஜே ஆரம்பத்தில் நினைத்து, இஸ்லாம் கூறக்கூடிய அமீருக்கு கட்டுப்பட்டு சுவனம் செல்லும் ஒரே கூட்டம் நாமே, ஜமாஅதுல் முஸ்லிமீன் எம்மை விட்டும் பிரிந்ததனால் அவர்கள் கூட்டமைப்பு பிரிந்து சென்றவர்கள் என நீரூபிக்க முயற்சி செய்தார். அது சாத்தியப் படவில்லை.

குர்ஆனும் ஹதீஸும் கூறக்கூடிய முழுமையான இஸ்லாத்தை ஜமாஅதுல் முஸ்லிமீன் தெளிவான ஆதாரங்களுடன் முன்வைத்ததும் மத்ஹபுவாதிகளை வழிகேடு என அவர் நிரூபித்தது போன்று அவரும் வழிகேடர் பகிரங்கமாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் முன்னர் அமீருக்கு கீழ் செயல்பட்டதை மாற்றி ஆட்சியதிககாரம் இல்லாமல் அமீரே கிடையாது எனும் புதுக் கண்டுபிடிப்பு. அதுவும் இப்போது எவ்விதப் பெறுமதியும் அற்ற சுயகருத்து என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. இனி மற்றுமொரு கண்டுபிடிப்பை எதிர் பார்க்கலாம்.

# பி.ஜே யின் அபாண்டங்களும், ஜாஹிலிய்யக் கருத்துக்களும்

அறியாமை: 01

*அமீருல் மு.்.மினீன் என்ற பொருளில் தங்களை இவர்கள் அமீர் என்று கூறுவார்களேயானால் அது நகைப்புக்குரியது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஏனெனில் அகில உலகத்தையும் அடக்கியாளுகின்ற எந்த அதிகாரமும் இவர்களிடத்தில் இல்லை. (அல்முபீன் - மார்ச் 1999 பக் 34)*

தெளிவு:

இது எந்த அளவு அறிவீனமான கூற்று என்பதை புத்தியுள்ள ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளலாம். ரஸூலுல்லாஹி (ஸல்) உட்பட அவர்களது உம்மத்தில் தோன்றிய எவருக்குமே முழு உலகத்தையும் அடக்கியாளும் அதிகாரம் இருக்கவில்லை. அப்படி இருக்கும் போது முழு உலகையும் அடக்கியாளும் அதிகாரம் இல்லை என்பதைக் கூறி ஒருவரை அமீர் அல்ல எனக்கூறுவது எவ்வளவு பெரிய அறியாமை. சத்தியத்தை மறுப்பவர்களிடமிருந்து அறியாமைத்தனமான கருத்துக்கள் வெளிப்படுவது இயல்பே.

அறியாமை: 02

*எல்லா முஸ்லிம்களுடமும் வேண்டாம். தன்னுடைய அமைப்பின் கீழ் உள்ள உறுப்பினர்களிடத்திலாவது முறைப்படி ஜகாத்தை எடுத்து ஏழைகளுக்கு வழங்குகின்றார்களா? தர மறுப்பவர்களுடன் போர் செய்ய இவர்களால் முடியுமா? நிச்சயமாக முடியாது.*

*(அல் முபீன் - மார்ச் 1999 பக்: 34)*

தெளிவு:

பி.ஜே இருக்கக்கூடிய நரகம் செல்லக்கூடிய பிரிவுகளில் அவர் கூறும் நிலை காணப்படலாம். அல்லாஹ்வின் அருளைக் கொண்டு சுவனம் செல்லக்கூடிய ஒரே கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனிலே இருக்கும் முஸ்லிம்களிடமிருந்து உரிய விதத்தில் ஸகாத்

அறவிடப்பட்டு, உலியவர்களுக்கு அது பங்கு வைக்கப்படுகின்றது. அவர்களோடு போராட வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

அறியாமை: 03

*கைது செய்யும் அதிகாரம் அமீர்களுக்கு உண்டு என்று ஹதீஸ்களில் இருந்து அறிந்தோம். நமது அமீர்களிடத்தில் சென்று இஸ்லாத்திற்கு மாற்றமாக நடப்பவர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கச் சொல்வோம். அவ்வாறு அவர் செய்து விட்டால் அவரை அமீர் என்ற மனப்பூர்வமாக ஒத்துக் கொள்ளலாம். (அப்போது அவரை நியமித்த இமாம் இருக்க வேண்டும்.) ஆனால் இங்குள்ள நிலைமை என்ன? தாங்கள் கைதாகிவிடக்கூடாது என்று அஞ்சி ஓடி ஒளிந்து கொள்ளும் நிலையில்தான் அமீர்கள் என்று கூறிக்கொள்வோர் இருக்கின்றார்கள்.*

*(அல் முபீன் - மார்ச் 1999 பக் : 35)*

தெளிவு:

இஸ்லாமிய கொள்கைக்கு முரணாக ஆன்மீகத் தலைமை , அரசியல் தலைமை என இரண்டாகப் பிரித்த பி.ஜே அவ்விரு தலைமைத்துவமும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடமும், பனூஇஸ்ரவேலர்களின் நபிமார்களிடமும் இருந்ததாகக் கூறுகின்றார். அரசியல் தலைமையைக் கொண்டிருந்த ரஸூலுல்லாஹி (ஸல்) முஷ்ரிகீன்களுக்கு எந்த அளவு பயந்திருந்தார்கள் என்பதைப் பாருங்கள் :

‘‘நீர் குர்ஆன் ஓதுவதை மிக சப்தமிட்டு ஓதவும் வேண்டாம். அதனை மிகவும் மெதுவாக ஓதவும் வேண்டாம்.’’ எனும் அல்குர்ஆனிய வசனம் சம்பந்தமாக இப்னு அப்பாஸ் (ரலி) கூறும் போது ரஸூலுல்லாஹி (ஸல்) மக்காவிலே (இஸ்லாத்தை வெளிப்படத்த முடியாமல்) மறைவாக இருந்த போது (இவ்வசனம் இறங்கியது).

ரஸூலுல்லாஹ்ி (ஸல்) தனது தோழர்களுக்கு தொழுவித்தால் அல்குர்ஆனை சப்தமிட்டு ஓதுவார்கள். அப்போது இணைவைப்போர் அதனை செவிமடுத்தால், குர்ஆனையும் அதனை இறக்கியவனையும், அதனைக் கொண்டு வந்தவரையும் திட்டுவார்கள். அப்போது அல்லாஹ் தனது நபிக்கு ''நீர் குர்ஆன் ஓதுவதை மிக சப்தமிட்டு ஓதவும் வேண்டாம். அதனை மிகவும் மெதுவாகவும் ஓத வேண்டாம்.'' எனக் கூறினான்.

(ஸஹீஹுல் புகாரி)

நபியவர்கள் சப்தமிட்டு அல்குர்ஆனை ஓத முடியாமல் இருந்தும் அரசியல் தலைவராக இருந்தார்கள் என்றால் முஸ்லிம்களின் விடயங்களை மாத்திரம் பொறுப்பேற்றிருக்கும் அமீர்கள் தாம் கைதாகி விடக்கூடாது எனும் எச்சரிக்கையுடன் நடந்துக்கொள்வதில் என்ன தப்பிருக்கின்றது..? சிந்திக்க வேண்டாமா?

# இறுதியாக........

ஆட்சியதிகாரம் இன்றி அமீரோ இமாமோ இல்லை என்றதொரு வாதத்ததை அறியாமையின் காரணமாக பி.ஜே முன் வைத்திருந்தார். அவரது ஆய்வு தவரானது என்பதை மொழி ரீதியாகவும், ஆதாரங்கள் ரீதியாகவும், பகுத்தறிவு ரீதியாகவும் மிகத் தெளிவாக நிரூபித்துள்ளோம். இதன் பிறகும் பி.ஜே அவர் கூறுவதுதான் சரி என ஆதாரங்கள் இல்லாமல் அடம் பிடிப்போராயானால் ஒரு வாதத்திற்காக அவரது நிலைப்பாட்டில் இருந்தே அவர் வழிகேட்டில் தான் இருக்கின்றார் என்பதையும் இங்கு தெளிவுபடுத்தி விடுகின்றோம். இஸ்லாமிய கண்ணோடடத்தில் பி.ஜே வழிகேட்டிலேயே இருக்கின்றார் என்பதை முன்னால் நிரூபித்து விட்டோம்.

ஆட்சியதிகாரம் உள்ள இமாமுக்கு கட்டுப்படுவது கடமை என பி.ஜே கூறுகின்றார். இன்று உலகில் பல நாடுகளில் தங்களை முஸ்லிம்கள் எனக் கூறிக்கொள்ளக் கூடிய ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவராக சஊதி அரேபியாவில் ஆட்சி அதிகாரத்துடன் கூடிய ஒரு இமாம் இருக்கின்றார். அவர் தன்னை பி.ஜே கூறுவது போல் அமீருல் மு.்.மினீன் என்றுகூடக் கூறுகின்றார். ஆகவே பி.ஜே யின் பார்வையில் இமாம் என்பதற்கு தகுதியுள்ள அந்த இமாமுக்கு, பி.ஜே பைஅத் செய்து, கட்டுப்பட்டு நடப்பது அவர் மீது கடமையாகின்றது. ஆனால் அதனைக்கூடச் செய்யவில்லை. ஆகவே பி.ஜே யின் கருத்தின்படி பார்த்தாலும் அவர் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டு, ஜாஹிலிய்யத்திலேயே இருக்கின்றார் என்பது நிரூபனமாகின்றது. இங்கு சஊதி அரேபியாவும் இந்தியாவும் வெவ்வேரான நாடுகள் எனக் கூறி தப்ப முடியாது. ஏனெனில் இஸ்லாத்தில் முஸ்லிம்களுக்கென ஒரே காலத்தில் இரண்டு இமாம்கள் இருக்க முடியாது. (இதுபற்றி பி.ஜே ஆசிரியராக இருந்து எழுதிய 19963 ஏப்ரலிற்கான அல்ஜன்னத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.)

அவ்வாறே உலகில் ஒரு கலீபா இருக்கும் போது இஸ்லாமிய ஆட்சி நடக்கும் அந்த நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்யாமல், அந்நிய ஆட்சியின் கீழ் பாவங்களை செய்துக் கொண்டு எவரேனும் வாழ்ந்தால் அவர் தங்கும் இடம் நரகமே என அல்லாஹ் கூறுகின்றான். (4 : 97)

சஊதி அரேபியாவை ஆட்சி செய்யும் இமாம் குர்ஆன், ஹதீஸைப் பின்பற்றுவதில்லை எனக் கூறி மக்களை ஏமாற்றவும் முடியாது. சஊதி அரேபியா ஆட்சியாளரை ஒரு முஸ்லிம் என ஏற்றுக் கொள்ளும் பி.ஜே அந்த ஆட்சியாளரிடத்தில் தெளிவான ஆதார மூலம் நிரூபிக்கக் கூடிய குப்ரை காணாதவரை கட்டுப்படாதிருக்க முடியாது.

( ஆதாரங்கள் பக்: 13 )

ஜமாஅதுல் முஸ்லிமீன் சஊதி அரேபியாவில் இருக்கக் கூடிய இமாமை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை எனும் சந்தேகம் வந்தால்,

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சஊதி அரேபியாவில் உள்ள இமாம், சுவனம் செல்லக்கூடிய ஜமாஅதுல் முஸ்லிமீனின் இமாம் அல்ல. முஸ்லிம்களின் இமாமிற்குரிய மிக முக்கியமான செயலாகிய அல்லாஹ் இறக்கியிருப்பதைக் கொண்டு அந்த இமாம் தீர்ப்பளிப்பதே கிடையாது. குர்ஆனையும், ஹதீஸையும் மாத்திரமே சட்டக் கோவையாக கொண்டு தீர்ப்பளிக்க வேண்டிய அந்நாட்டில் ஐரோப்பிய சட்ங்களின் அடிப்படையில் நீதி மன்றங்கள் காணப்படுவது ஒன்றே அங்குள்ள இமாம் முஸ்லிம்களின் இமாம் அல்ல. என்பதற்கு மிகப்பெரிய சான்றாகும். அல்லாஹ் இறக்கியதைக் கொண்டு தீர்ப்பளிக்காதவர்கள் நிராகரிப்பாளர்களே என அல்குர்ஆன் தீர்ப்பளிக்கின்றது. ஒரு இஸ்லாமிய ஆட்சி அமைந்து விட்டால் அந்நிய ஆட்சிகளின் கீழ் உலகெங்கும் வாழும் முஸ்லிம்களை அழைக்க வேண்டியது அந்த ஆட்சியின் கடமையாகும். ஆனால் வருவோரையுெ தடை செய்யக் கூடியதாகவே சஊதி அரேபியச் சட்டம் காணப்படுகிறது. வட்டியை ஒழிக்க வேண்டிய நாட்டில் வட்டி இல்லாத வங்கியே இல்லை எனும் நிலை. இத்தகைய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சஊதி அரேபியாவில் இருக்கும் ஆட்சியாளர் ஜமாஅதுல் முஸ்லிமீனின் இமாமே அல்ல.

பி.ஜே போன்ற வழிகெடுக்கக் கூடிய தலைவர்களை நம்பி எவராவது இதுவரை சுவனம் செல்லக் கூடிய ஒரே கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனில் நுழையாமல், மக்களை நரகில் கொண்டு சேர்க்கக் கூடிய மத்ஹபுகள், தரீகாக்கள், பிரிவினைவாத இயக்கங்கள் போன்றவற்றில் இருந்தால் உங்களை நரகிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்காக உடனடியாக, நரகின் பால் அழைக்கக்கூடிய அனைத்துப் பிரிவுகளையும் விட்டு ஒதுங்கி ஜமாஅதுல் முஸ்லிமீனில் நுழைந்து விடுங்கள். அல்லாஹ் எம் அனைவரையும் வழிகெடுக்கக் கூடிய தலைவர்களிடமிருந்து பாதுகாத்து, நேரான வழியில் நிலைத்திடச் செய்து, முஸ்லிம்களாகவே மரணிக்கக் கூடிய பாக்கியத்தையும் தந்தருள்வானாக! ஆமீன்.